நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் 29 1-15 செப்டம்பர் 1993 விலை 7/=

## இன்றைக்கு வேறுண்டோ இடம்



சிறையினிலே போட்டுவிட்டீர் சேகரனை மீண்டுமெனப்
பறையறைந்து பாரெல்லாம் பகராதீர் - சிறுமதியீர்
ஒன்றை அறிவீரோ? உயிர்காக்கச் சிறையை விட்டால்
இன்றைக்கு வேறுண்டோ இடம்.

- ஈழமோகம்

# பட்டாளத்தை ஒரு லட்சமாக்க அரசு முயற்சி



நாடு முழுவதும் இருபத்தியொரு நிலையங்களில் இலங்கைப் பட்டாளத்திற்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடந்து முடிந்துள்ளன. வடக்கு கிழக்கில் யுத்தத்தை மேலும் உக்கிரமாக நடாத்துவதற்கென்று பத்தாயிரம் சிப்பாய்களை புதிதாகப் பட்டாளத்தில் சேர்ப்பதற்கான திட்டத்திற்கமையவே இந்த நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே இலங்கை இராணுவத்தில் 90,000 இராணுவத்தினர் உள்ளனர். இராணுவத்தினரின் தொகையை ஒரு லட்சமாக்கும் அரசின் திட்டப்படி சேர்க்கப்படும் இவர்கள் குறுகிய பயிற்சியின் பின் வடக்கு கிழக்கின் யுத்தமுனைக்கு அனுப்பப்படுவர்.

93ம் ஆண்டின் முன்னரைக் காலப் பகுதியில் மூன்று தடவைகள் அரசாங்கம் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்புக்காக அறிவித்திருந்த போதும், நேர்முகப்பரீட்சைக்காக வந்திருந்தவர்களின் தொகை மிகச் சிறியளவாகவே இருந்தது. இதனால், இம்முறை இராணுவத்தில் சேர்வதற்கான அடிப்படைத் தகுதியாக 5ம் வகுப்புப் படிப்பே போதுமானதெனவும் ரூபா நாலாயிரம் மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்தது. இதைத் தவிர, சேவையில் சேர்க்கப்படுபவர்களுக்கு வீட்டு வாடகை, சீருடை, மருத்துவ வசதி என்பனவும் வழங்கப்படுமென்றும், உயரம் குறைந்தவர்களும், 17 வயதானவர்களும் நேர்முகப்பரீட்சைக்கு வரலாம் எனவும் அறிவித்துள்ளது. கடந்த மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது, 8ம் வகுப்புப் படிப்பு அடிப்படையாக இருந்தது. ஒரே மாதத்தில் அரசு தகுதியை 5ம் வகுப்புக்குக் கீழிறக்கியுள்ளது.

பட்டாளத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான விளம்பரங்கள் கவர்ச்சிகரமான முறையில் தொலைக்காட்சியிலும், சிங்களப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. சேர முன்வருபவர்கள் தொகை அதிகரித்து வருகிறது என்று திருப்தி தெரிவிக்கின்றார்கள் தளபதிகள்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் 47,000 ஆக இருந்த மொத்தப் படையினரின் தொகை 3 மடங்காக அதிகரித்துள்ளது.

''இரண்டாவது ஈழ யுத்தம்'' ஆரம்பமான போது புலிகளின் படையைக் குழந்தைகள் பட்டாளம் என அரசும் அரசுசார் பத்திரிகைகளும் வர்ணித்திருந்தன. இப்போது அரசுப் பட்டாளமும் குழந்தைகள் பட்டாளமாக மாறி வருகின்றது. ஆட்சேர்ப்புக்கு அலவன்ஸ்சுகளும் உயர்ந்த சம்பளமும் நீண்டநாட்களுக்கு உதவாது என்பது பத்தாயிரம் பட்டாளத்தினர் விலகியிருப்பதிலிருந்து அரசுக்குப் புரிந்திருக்க வேண்டும். இப்படித் தப்பியோடிய படையினரைத் திரும்பிப் பிடிக்கும் முயற்சியும் தோல்வியைத் தழுவிவிட்டது.

குழந்தைகளிடம் இருந்து ஞானம் பிறக்கிறது என்று ஆங்கில மூதுரை ஒன்றுண்டு. இலங்கையில் பட்டாளங்களில் சேர்கிற குழந்தைகளின் அஞ்ஞானத்தை மூலதனமாக வைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்க முனைவது நீடித்த யுத்தத்திற்கே வழிவகுக்கும் என்பது அரிவரிப் பாடம் அல்லவா?

| ஆண்டு | இராணுவம் | கடற்படை | விமானப்படை | விசேட அதிரடிப்படை | பொலிஸ் | தே.ப.தொ. படை | ஊர்காவல் படை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1989 | 40,000 | 5,500 | 3,700 | 2,000 | 21,500 | 5,000 | 1,800 | 47,000 |
| 1990 | 50,000 | 8,100 | 7,000 | 3,500 | 22,500 | 5,000 | 1,800 | 65,100 |
| 1991 | 70,000 | 85,000 | 10,000 | 2,000 | 28,000 | 12,000 | 1,800 | 8,85,000 |
| 1992 | 89,000 | 8,900 | 8,000 | 3,000 | 27,000 | 12,000 | 15,200 | 10,59,000 |

(1992இல் எடுக்கப்பட்ட விபர மதிப்பீட்டு அட்டவணை ஒன்றை தருகிறோம்)

**பாதுகாப்புச் செலவு**

| வருடம் | பாதுகாப்புச் செலவு (ரூபா. மில்லியன்) |
|---|---|
| 1982 | 1,400 |
| 1983 | 1,870 |
| 1984 | 2,600 |
| 1985 | 6,196 |
| 1986 | 16,300 |
| 1987 | 11,400 |
| 1988 | 10,200 |
| 1989 | 12,670 |
| 1990 | 17,600 |
| 1991 | 18,620 |
| 1992 | 20,300 |
| 1993 | 18,300 |

# அரசு தேர்தல்களை நடாத்த முனைவதன் பின்னணி என்ன?

கிழக்கிலும், வடக்கில் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த எடுக்கப்பட்டிருந்த முடிவை ஒத்திவைத்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே வட-கிழக்கைக் துண்டாடுவதற்கான கருத்துக் கணிப்பு நடாத்தப்படுமென முடிவு செய்திருந்த போதும் அதற்கேற்பட்ட எதிர்ப்பின் காரணமாக சற்றுப் பின்வாங்கிய அரசு அத்தகையதொரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துவதற்கான நிலைமை பற்றிய கணிப்பீட்டைச் செய்வதற்காக இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த முடிவு செய்திருந்தது. உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதன் மூலமாக அங்கு தேர்தலுக்கான சூழல் நிலவுவதாகக் காட்ட அரசு முயற்சி செய்தது.

அரசுக்குச் சாதகமான சக்திகளைப் பலமாக்குவது, கிழக்கில் தனக்கென சார்பான தலைமையொன்றை உருவாக்குவதில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை எதிர்ப்பவர்களை முறியடிப்பது என்பவற்றின் மூலம் தனது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே அரசின் நோக்கமாகும்.

ஆனால் இதன் மூலத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் போல தமிழர் கட்சிகள் வழமை போல அரசிடம் வேண்டுகோள் விடுப்பதுடன் பணியை முடித்துக் கொண்டுள்ளனர்.

இப்போது கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லையென்றும்; அவ்வாறு நடாத்தினாலும் அரசு வெல்லக்கூடிய வாய்ப்புகள் அற்ற சூழ்நிலையே காணப்படுவதாகவும் கிழக்கின் அரசுப் பிரதிநிதிகள் கோரியதை அடுத்தே தேர்தலை அரசு ஒத்திவைத்துள்ளது.

மறுபுறத்தில் வட-கிழக்கு இணைப்புத் தொடர்பான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்தும் புதிய திகதியையும் அரசு அறிவித்திருக்கிறது. 1994 பெப் 18இல் கிழக்கு மாகாணத்திலும், 1994 ஏப்பிரல் 28 இல் வடக்கு மாகாணத்திலும், 1994 ஏப்பிரல் 28 இல் வடக்கு மாகாணத்திலும் நடாத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இம்முறையே அரசு முதல் முறையாக வட மாகாணத்திலும் கருத்துக்கணிப்பை நடாத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இராணுவத்திற்கு ஆள்சேர்ப்பதிலும் வட-கிழக்கைப் பிரிப்பதற்கான கருத்துக்கணிப்பை நடாத்துவதிலும், உள்ளூராட்சி தேர்தலை வைத்து தம்மைப் பலப்படுத்தலாமா என்று யோசிப்பதிலுமே முனைப்பாக இருக்கிற அரசு, தமிழ் முஸ்லீம் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ஒரு போதும் முன்வைக்கப் போவதில்லை என்பதை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.




மட்டக்குளியில் தமிழ் வாலிபர் ரயர் போட்டு எரிப்பு - செய்தி

நன்றி: அத்த

நன்றி - நூலகத்திட்டம்



## இங்கே முஸ்லீம்கள்

## இருக்கிறார்களா அப்பா?

கொழும்பில் வேலைபார்க்கிற நண்பர் ஒருவரின் குடும்பத்தினர் - மனைவியும் இரண்டு பிள்ளைகளும் - நீண்ட கஷ்டங்களுக்குப் பிறகு ஒருவாறு கொழும்பு வந்து சேர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில், படித்துக் கொண்டிருந்த தனது குழந்தைக்கும் தாய்க்குமாக 'பாஸ்' எடுத்து கொழும்புக்குக் கொண்டுவருவதில் அவர் பட்ட கஸ்ரங்கள் நிறைய.
கொழும்பில் தான் வாடகைக்கு அமர்த்திய ஒரு சிறிய 'அனெக்ஸ்' சுக்குள் போய் குடியேறினார்கள் அவர்கள்.

'கொழும்பு வந்து சேர்ந்தது எப்படி இருக்கிறது? சந்தோஷமாக இருக்கிறதா?' என்று கேட்டார் தகப்பன் - தனது மூத்த மகளிடம். 'இங்கே முஸ்லீம்கள் இருக்கிறார்களா? என்று கேட்டார் மகள் பதிலுக்கு.
'ஓ... ஏன் கேட்கிறாய்...?'

'பார்க்க ஆசையாக இருக்கிறது.'

-இது மகளின் பதில். தனது யாழ்ப்பாண வீட்டைச் சூழ இருந்த முஸ்லீம் குடும்பங்கள், மகளுடன் கூடி விளையாடிய முஸ்லீம் குழுந்தைகள்... ஞாபகம் வர, வாயடைத்துப் போனார் நண்பர்!

## ஜமாயுங்கள் அமைச்சரே

## வாழ்த்துக்கள் உங்களுக்கு!

பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் எதையுமே செய்ய முடியவில்லை என்று துவண்டு போய்விடாமல் புதிய சிந்தனையுடன் செயற்பட வேண்டும், புதிய தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்' என்று அண்மையில் பாராளுமன்றத்தில் பேசியிருந்தார் இந்துசமய இராஜாங்க அமைச்சர் தேவராஜ் அவர்கள்.

அமைச்சர் தேவராஜ் அவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார் என்று புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது - இவரது இந்தப் பேச்சைக் கேட்கும் போது!

'தெரிவுக்குழு' தெரிவு செய்யப்பட்டதே எதையுமே செய்யாமல் இருப்பதற்காகத் தானே?

அப்படி இருக்க, தெரிவுக்குழு எதுவுமே செய்யவில்லை என்று யார் துவண்டு போகப்போகிறார்கள்?

அது ஏதாவது செய்யும் என்று எதிர்பார்த்திருந்தாரோ அமைச்சர் தேவராஜ்.

அல்லது, விரைவிலேயே அது அம்பலமாகிப் போய்விட்டதால் புதிதாக ஒரு யோசனையை முன்வைத்து இன்னும் சிலகாலம் பொழுது போக்க ஏதுவாக ஏதாவது செய்ய 'துவண்டு போகாமல்' முன்வர வேண்டும் என்று கூறுகிறாரா அமைச்சர் அவர்கள்?



தெரிவுக்குழு எதுவும் செய்ய முடியாத குழுவாகப் போனதற்கு பொறுப்பேற்காமல், பொறுப்பேற்க வேண்டியவர்களை கேள்வி எழுப்பாமல் புதிய யோசனைகளுக்கு அடிகோலுகிறார் அமைச்சர்.

அவர்கள் பிழைப்பு அவர்களுக்கு; அதை மறைக்க ஒரு தமிழ் சாகித்திய விழா!

ஜமாயுங்கள் அமைச்சரே! வாழ்த்துக்கள் உங்களுக்கு.

## 'ஐலண்ட்'டின்

## பிழைப்பு!

அண்மையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்று ஐலண்ட் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது

வெடிமருந்துகளுடன் விமான நிலையத்துக்கு வந்த இவர், பாரிஸில் இருந்துவந்து இலங்கையில் தங்கிவிட்டு திரும்பிக் கொண்டிருந்த ஒரு 18 வயது இளைஞர்.

இலங்கையராக இருந்த போதும், பாரிஸிலேயே வசிப்பவர். இவர் வைத்திருந்த 'வெடிமருந்து'கள் - உள்நாட்டு வெடிகள் தயாரிக்கும் மருந்துகளே. அவற்றுடன் சில உள்ளூர் தயாரிப்பு வெடிகளும் இருந்தன.

இவரைக் கைது செய்த விமான நிலையப் பொலிஸார் மேலதிக விசாரணைக்காக அவரை அழைத்துச் சென்றுள்ளதாக தகவல் தெரிவித்தது அந்த தலைப்பு செய்தி.

செய்தியில் விசேடம் ஒன்றுமில்லை.

ஆனால் செய்தியை எழுதி;அதைத் தலைப்பு செய்தியாகப் போட்ட 'ஐலண்ட்' டின் நோக்கம் மிகத் தெளிவாக தெரிகிறது. அதுதான், இந்த வெடிமருந்துகளை கொண்டு சென்றவர் ஒரு 'தமிழர்' என்ற ஊகத்தை ஏற்படுத்துவது.

வெடிமருந்து,பாஸ்போர்ட் பிரச்சினைகளில் விமான நிலையத்தில் பிடிபடுபவர்களது இனத்துவம் குறித்து எப்போதுமே துல்லியமாக [Srilankan Tamil] என்று எழுதி வருகிற ஐலண்ட் இம்முறை ஒரு சிங்களவர் பிடிபட்டவுடன் அவருடைய இனத்துவத்தைக் குறிப்பிடமால் வாசிப்பவர்கள் மனதில் தமிழர் என்று சந்தேகம் வரும்படி எழுதியமையின் உள்நோக்கம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். எதைச் செய்தாலும், புலி என முத்திரை குத்துவது ஐலண்ட்டின் 'பிழைப்புக்கும்' அவசியமாகிப் போய்விட்டது.

இனவாதத்திற்குத் தொடர்ந்து எண்ணைவார்க்கும் கைங்கரியத்தை செய்துவரும் இப்பத்திரிகை, அந்த இளைஞர் சிங்களவர் என்று எழுதாமல், 'இனம்தெரியாத' என்று எழுதியுள்ளது.

அந்த இளைஞர் ஒரு தமிழராக இருந்திருந்தாலோ..'புலி' என்று எழுதியிருக்கும் ஐலண்ட்.

அத்துலத் முதலி விசாரணையின் முடிவுகளுக்காக இன்று வாய் பிழக்கும் ஐலண்ட் தனது நெஞ்சில் கையை வைத்து முதலில் உண்மைகளைப் பேசப் பழகிக் கொள்ளட்டும்.

அதன் பிறகு மற்றவை பற்றி பேசலாம்!

வாசகர்களுக்கு !
புதிய தொலைபேசி இல: 574047
அடுத்த இதழ் செப். 17இல்



### பத்திரிகைகளின் கடமை

"வட கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தீர்வொன்றை முன் வைப்பதன் மூலம் தமது கடமைகளைச் செய்யுமாறு பத்திரிகைகள் அரசியல் கட்சிகளுக்குக் கூறுகின்றன. இங்கு பத்திரிகைகளும் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கின்றது. அது என்னவெனில் யுத்த இரகசியங்களை அல்லது அது தொடர்பான விடயங்கள் அனைத்தையும் பத்திரிகைகளில் வெளியிடாது, போரைத் தீர்ப்பதற்கு உதவி செய்வதே"
ரணில் விக்ரமசிங்க - லங்காதீப - 11.8.93

### சதியேயன்றி வேறல்ல

சிங்களவர்களைக் கொல்லும் சதியேயன்றி இனப்போராட்டம் என்ற ஒன்று நாட்டில் இன்று இல்லை.
ருஹுணு பல்கலைக்கழகப் பேராசிரியர் அலவத்தா கொட பிரேமதாச - லங்காதீப - 11.8.93

### எட்ட நில்லுங்கள்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்க விரும்பும் கட்சிகள், தமது கட்சிகளைக் கலைத்து விட்டோ அல்லது வெளியிலிருந்தோ ஆதரவு வழங்க முடியும்.
ரணில் விக்கிரமசிங்க தினகரன் 12.8.

### இனப்பிரச்சினையல்ல

இலங்கையின் வட - கிழக்கில் நிலவும் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். அதுவொரு இனப்பிரச்சினையல்ல. அதுவோர் பயங்கரவாதப் பிரச்சினை . அது துப்பாக்கிக் கலாசாரத்தினை மையமாகக் கொண்டது. ஒவ்வொரு இனக்குழுவும், ஒவ்வொரு மதப்பிரிவும் ஒன்றுக்கொன்று சமமான பங்காளர்கள் என இருக்கக் கூடிய ஓர் இலங்கையை அது கோருகிறது.
ஜனாதிபதியின் செயலாளர் கே.எச்.ஜே விஜேதாச - தி ஐலண்ட் - 13.8.93

### கொப்பேகடுவவின் குண்டு

திரு. கொப்பேகடுவவுக்கு வைக்கப்பட்ட குண்டு முழுநாட்டிற்கும், இனத்திற்கும் வைக்கப்பட்ட ஒன்று என்றே கருதப்பட வேண்டும்.
பெலிகல்லகே ஜினவங்ஸ பிக்கு - லங்காதீப - 13.8.93

### ஜனநாயகத்திற்கு அடி

பாராளுமன்றம் என்னவென்பதை பாராளுமன்ற உறுப்பினர்களது சொற்களால் தெரிந்து கொள்ள பொதுமக்களுக்கு உரிமை இருக்கின்றது. அந்த உரிமைக்குத் தடை போடுவது இந்த நாட்டின் ஜனநாயகத்திற்குச் செய்யப்படும் பலத்த அடியாகும்
தி ஐலண்ட் பத்திரிகையின் இணையாசிரியர் அஜித் சமரநாயக்க -லங்காதீப - 13.8.93

### ஐ.தே.க - ஐ.ஐ.தே.மு. இணைப்புக்குப் புலிகள் எதிர்ப்பு!

ஐ.தே.கவுக்கும் ஐ.ஐ.தே.முக்குமிடையே உடன்பாடொன்று ஏற்பட்டுள்ளதென்ற அனுமானம் வாய்க்கு வாய் பரவிச் செல்கையில் அவ்வாறான இணைப்பு ஏற்படுவதைத் தவிர்க்கப் புலிகள் இயக்கம் தங்களுடைய தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருப்பது போல் தெரிகிறது.
அரசியல் விமர்சகர் - த சண்டே ரைம்ஸ் - 15.8.93

### வெல்ல வேண்டிய யுத்தம்

வடபகுதி யுத்தத்தை வெல்ல முடியாவிட்டால் எமக்கு எதுவுமே இல்லை என்றாகிவிடும். எமது உதாரண புருஷர்கள் யுத்தத்தினால் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறார்கள்.
மாதுலுவாவே சோபித தேரர் - திவயின - 16.8.93

### அரசைக் கவிழ்க்கச் சதி

வட கிழக்குப் பிரச்சினை இன்றைக்குப் பத்துப்பதினைந்து வருடங்களுக்கு முன்னர் சிறிய எண்ணிக்கையான சிலரால் உண்டாக்கப்பட்ட ஒன்றாகும். பயங்கரவாத நடவடிக்கை, ஆயுதங்கள் மூலம் உறுதியான அரசைக் கவிழ்க்கச் செய்யப்படும் வேலைத் திட்டம் என்பது இன்று இரகசியம் அல்ல.
ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி பெல்லன்வில விமலரத்ன தேரர் - திவயின - 16.8.93

### பிரதானமான சவால்

புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து எமது தாய்நாட்டை விடுவித்துக் கொள்வது தற்போதைய சந்ததியினர் முன்னுள்ள பிரதானமான சவாலாகும்.
ஆசிரியர் தலையங்கம் - திவயின - 16.8.93

### பிரபாகரனைப் பிடித்தி ருக்கலாம்

திரு. கொப்பேகடுவ அவர்களுக்குத் தேவையான முறையில் யுத்தத்தை நெறிப்படுத்தக் கொடுத்திருந்தால், பிரபாகரனை உயிருடன் பிடித்துக் கொண்டு வந்து இந்த நாட்டின் என்றென்றைக்குமான தலைவராக ஆகியிருப்பார் திரு. டென்சில் கொப்பேகடுவ.
காலி மாவட்டப் பிரிவெனாக்களின் பரிசோதகர். அதுறலியே இந்தரதன தேரர் திவயின 16.8.93

### செஞ்சிலுவையே வெளி யேறு!

சாவதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்குப் பாதுகாப்பும், சர்வதேச பிரச்சாரமும் பெற்றுக் கொடுத்தது யார்?
காலி மாவட்டப் பிரிவெனாக்களின் பரிசோதகர் அதுறலியே இந்தரதன தேரர் - திவயின - 16.8.93

### விஜேதுங்க புத்திசாலி

எமது ஜனாதிபதி திரு. டீ.பி.விஜேதுங்க மலைநாட்டுச் சாதாரண குடும்பத்தின் ஒருவர். அவர் வட-கிழக்கு, மலைநாட்டுப் பிரச்சினை பற்றி புத்திசாலித்தனமாகச் சிந்தித்துச் செயல்படுகின்றார்.
ஐ.ஐ.தே.முயின் கேகாலை மாவட்டத் தலைவரும், சப்ரகமுவ மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினருமான திரு. பீ.ஜீ.பீ. கலுகல்ல -லங்காதீப - 16.8.93

### ஜே.ஆரின் தீர்வு

என்னுடைய அபிப்பிராயப்படி இந்தத் தொல்லையான இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண்பதற்கான ஒரு சிறந்த அடிப்படையாக இப்போதும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான் உள்ளது. மாகாண சபைகளினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கலைவிட அதிகமாக எதனையும் எந்த ஒரு அரசினாலும் வழங்க முடியாது.
முன்னாள் ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜயவர்தன - த் சண்டே ரைம்ஸ் - 22.8.93

### ஐ.ஐ.தே.முவை கலை

"ஆளும் ஐ.தே.கவுடன் இணைந்து கொள்வதென ஐ.ஐ.தே.மு யினர் தீர்மானித்தால் முதலில் அக் கட்சியைக் கலைத்து விட வேண்டும். அதன் பின்னர் தனிப்பட்ட உறுப்பினர்களாக அவர்கள் ஐ.தே.க யில் இணைந்து கொள்ள வேண்டும்".
முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன - த சண்டே ரைம்ஸ் - 22.8.93

### 'தேர்தல்களை அல்ல; தீர்வே இன்று முக்கியமானது'

இன்று வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது தேர்தல்கள் அல்ல, அமைதியையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் தீர்வே இன்று அத்தியாவசியமாக உள்ளது.
ஸ்ரீ லங்கா முஸ்லீம் கட்சியின் தலைவர் திரு. எம்.எச்.சேகு இஸ்ஸதீன் - வீரகேசரி - 23.8.93

### ஹெட்டியாரச்சி

நன்றி - நூலகத்திட்டம்



# இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வு:

# நடைமுறையில் யுத்தமும் பேச்சில் சமாதானமும்

## உலகளாவிய ஒத்துழைப்புக் கவுன்சிலின் சமாதானத் திட்டத்தினை அரசு நிராகரித்தது



ஜனாதிபதி விஜயதுங்காவின் செயலாளர், அண்மையில் 'உலகளாவிய ஒத்துழைப்பு கவுன்சிலின்' தலைவருக்கு எழுதிய கடிதம் மிகவும் பிரசித்தி வாய்ந்தது. வடக்கு கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல, அது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே. அதைத் தீர்ப்பதற்கு ஐ.நாடுகள் சபை தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்று' அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கடிதம் எழுதப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு ஆனமடுவவில் நடைபெற்ற ஆடைத் தொழிற்சாலை திறப்பு விழாவொன்றில், அதனைத் திறந்து வைத்துப் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 'இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம். அதை நாமே பேசித் தீர்க்கலாம்' என்று பேசியிருந்தார். (ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்குப்பின் ஆடைத் தொழிற்சாலைகளைத் திறப்பது, ரூபவாஹினிக்காரர்களுக்கு சிரமம் இல்லாமல் அவர்களது கமராக்களுக்கு தொடர்ந்தும் வேலை கொடுப்பது என்பன புதிய பிரதமரின் இப்போதைய பிரதான கடமைகள் ஆகிவிட்டன. புதிய ஜனாதிபதிக்கு ரூபவாஹினியில் தோன்றுவது அவ்வளவு இஷ்டமில்லையோ என்னவோ, பிரதமருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.) இவரது இந்த 'ஆனைமடுவ' பேச்சுக்கு ஒரு சில நாட்களுக்கு முன்புதான் ஜனாதிபதி விஜயதுங்கா, 'இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இலங்கை சர்வதேச உதவியை நாடும்' என்று மலேசிய செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்த முன்னுக்குப் பின் முரணான அறிவிப்புக்கள், ஜனாதிபதியும் பிரதமரும் ஒருவருக்கு முரணாக ஒருவர் கருத்துத் தெரிவிப்பது என்பன கேலிக்குரியதாகவும், எரிச்சலூட்டுவதாகவும் ஒருவருக்குத் தோன்றக் கூடும். இதன் பின்னணியில், முன்னைநாள் ஜனாதிபதி ஜே.ஆரின் குள்ளநரித் தந்திரத்தின் சாயல் வெளிப்படுவதை அவதானமாகப் பார்த்தால் புரிந்து கொள்ளமுடியும். மேலோட்டமான பார்வையில் அப்பாவித்தனமானதாக, விசமத்தனமானதாக, சிலவேளைகளில் உளறல்களாக தோற்றம் காட்டிய - கோமாளித்தனமாக வெளிப்பட்ட பல நடவடிக்கைகள், ஜே.ஆரின் திட்டமிட்ட சீரான பலமிக்க ஆட்சிக்கு பக்கபலமாகவே இருந்தன என்பது வெளிப்படை.

மூன்று மாதங்களுக்கு முன்னர், ஆமர்வீதிக் குண்டுவெடிப்பில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டதால் ஏற்பட்ட திடீர் நெருக்கடியில் அதிர்ஷ்டவசமாக வாய்க்கப்பெற்ற ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொண்ட டிங்கிரி பண்டா விஜேயதுங்கா த்னது முதலாவது பாராளுமன்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தின. வடக்கு கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல,அது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்று அவர் அன்று அறிவித்தார்.

புதிய ஜனாதிபதி பதவி கிடைத்ததால் அவருக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியில் இருந்து மீளமுதல் அவர் தெரிவித்த ஒரு கருத்தாகக் கூட இது இருக்கக் கூடும் என்றுதான் முதலில் எண்ணத் தோன்றியது. ஜனாதிபதியும் பிரதமரும் அதன்பிறகு மாறிமாறி தெரிவித்து வந்த கருத்துக்களின் போது இது உண்மை போலவும் தோற்றம் காட்டியது.ஆனால் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் அவர்கள் கண்ணாகவே உள்ளனர் என்பது, ஜனாதிபதியின் செயலாளரது இந்தக் கடிதம் எழுதப்பட்டதற்கும், ஜனாதிபதி பதவி ஏற்றதற்கும் இடைப்பட்ட மூன்று மாதகாலத்துள் தெளிவாக புலப்பட ஆரம்பித்துவிட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் தமது கடிதத்தில் கனடாவிலுள்ள உலகளாவிய ஒத்துழைப்பு கவுன்சிலால் வரையப்பட்ட ஐந்து அம்சத்திட்டங்களுக்கு மறைமுகமாகப் பதில் அளித்துள்ளார். ஐ.நா.தலையீட்டுடன் யுத்தநிறுத்தம் மேற்க்கொள்ளப்பட வேண்டும் என்ற முதலாவது கோரிக்கை, 'பயங்கரவாதிகளுடன் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படமுடியாது' என்று குறிப்பாலுணர்த்தி நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து அம்சத் திட்டத்தில் முக்கியமான விடயங்கள் மூன்று உள்ளன. ஒன்று யுத்த நிறுத்தம். மற்றையது தேர்தல். மூன்றாவது சுயாட்சி அமைப்பொன்றிற்கான. ஒரு அரசியல் தீர்மானம். இந்த மூன்று அம்சங்களும் இலங்கை அரசைப் பொறுத்த வரையில் நினைத்துக் கூட பார்க்கத் தயாரற்ற விடயங்களாகும். யுத்தநிறுத்தம் என்பது புலிகளை இராணுவரீதியில் பலப்படுத்த உதவும் என்பதும், தேர்தலை நடாத்த முயல்வது புலிகளுக்கு ஒரு பிரதேசத்தை அப்படியே கையளிப்பதாக அமையும் என்பதும், பிரதேச சுயாட்சி பற்றி பேசுவது பேரினவாத அடிப்படைக்கே ஆப்பு வைத்துவிடும் என்பதும் அரசிற்கு இயல்பாகவே ஏற்பட்டுள்ள பயங்களாகும்.

உண்மையில் நோபல் பரிசு பெற்றவர்கள் கைச்சாத்திட்டுள்ள இந்த ஐந்து அம்சத்திட்டம் சாரத்தில் தமிழ் பேசும் மக்களின் 'நியாயமான அரசியல் உரிமைகளை தெளிவாகப் புரிந்து கொண்டு தயாரிக்கப்பட்டவையோ, இலங்கை அரசின் தன்மைகளை விளங்கிக் கொண்டு தயாரிக்கப்பட்டவையோ அல்ல. சோவியத்தின் சரிவுக்குப் பின் முற்றுமுழுதான அமெரிக்க ஏஜென்டாக மாறிப் போய் விட்ட ஐ.நா. சபையின் சமாதானத் திட்டங்கள் இன்று பலநாடுகளில் நிலமையை சுமூகமாக்குவதற்குப் பதில் மோசமாக்கியே விட்டுள்ளன. ஐ.நா.புகுந்த நாடுகள், யானை புகுந்த காடுகளாக களேபரப்படுகின்றன. சோமாலியாவில் ஐ.நாவின் போர்வையில் அமெரிக்கப்படைகள் செய்யும் அட்டகாசங்கள் இப்போது அம்பலமாகி வருகின்றன. இலங்கையில் 'சமாதானத்தை' கொண்டுவர இந்தியப்படையை 'இறக்குமதி' செய்வித்த ஜே.ஆர் அரசு பட்ட அனுபவம் இலங்கையின் வரலாற்றில் மறக்க முடியாத அனுபவமாகும். ஐ.நா. தலையீட்டுடனான யுத்தநிறுத்தம் என்பது, இந்தியத் தலையீட்டுடனான யுத்தநிறுத்தம் போல அமைய மாட்டாது என்பதற்கும் உத்தரவாதம் எதுவும் இல்லை. இந்த நிலையில் இலங்கை அரசு இன்னொரு புதிய அரசியல் நெருக்கடிக்கு தன்னை உள்ளாக்கிக் கொள்ள தயாரில்லை என்று அறிவித்ததில் எந்தவிதமான ஆச்சரியமுமில்லை.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், ஐ.நா.தலையீடு நிலமையை எந்தவிதத்திலும் சிறப்பான நிலைக்கு இட்டுச் செல்லுமென உத்தரவாதம் அளிக்க முடியாது. ஐந்து அம்சங்களில் முதலாவதான யுத்தநிறுத்தம் தொடர்பான அம்சத்தில் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்பது பேசப்படவில்லை. இரண்டாவதாக, அப்படி ஒரு யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட்டாலும், அது புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான **சண்டை நிறுத்தப்படுவதை குறிக்குமேயொழிய,யுத்த சூழ்நிலைக்குள்** மக்கள் வைக்கப்பட்டிருப்பதை எந்த விதத்திலும் தீர்த்து விடப் போவதில்லை.

ஐ.நாவும் சரி, பிற எந்த ஸ்தாபனங்களும் சரி,யுத்தத்தை நிறுத்தி, தேர்தல் ஒன்றை நடாத்தி, சுயாட்சி சம்பந்தமான ஒரு முடிவை எடுத்துவிட்டால் நாட்டின் நிலைமை சுமூகமடைந்து விடும் என்றே எதிர்பார்க்கின்றன. இத்தகைய எதிர்பார்ப்புடன்தான் இந்தியப் படையும் இங்கு வந்திறங்கியது. ஆனால் தமிழ் பேசும் மக்களது பிரச்சினை இவ்வளவு இலகுவான பிரச்சினை அல்ல! எல்லாச் சமாதான் விரும்பிகளும் எதிர்பார்ப்பது, இருசாரரும் தமது நிபந்தகைளுக்கு உடன்பட்டு சமாதானமாக இருக்கவேண்டுமென்பதையோ இருசாராருக்கும் இடையிலான பிணக்கின் அடிப்படைகளை இல்லாது ஒழிக்க முயல்வதல்ல. இத்தகைய சமாதான முயற்சிகள் இருசாரரிடமும் இருக்கின்ற இணக்கமின்மையை தமக்குப்பிடித்தமான விதத்தில் வியாக்கினம் செய்து கொள்வதில் இருந்தே எழுகின்றன.

இலங்கையின் பேரினவாத சிங்கள பௌத்த அரசுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு எவ்வளவு ஆழமானது என்பதை இலங்கை ஜனாதிபதியின் இந்தக் கடிதம் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது. பிரச்சினை அவ்வளவு இலேசானதாக இருந்திருந்தால், இந்த ஐந்து அம்சத்திட்டத்தை நிறைவேற்ற ஒரு ஐ.நா. சபை தேவையில்லை. இலங்கை அரசாலேயே அதைச் செய்திருக்க முடியும்.

யுத்தத்தை நிறுத்துவது, தான் வழங்கவிருக்கும் சுயாட்சி அமைப்பை பகிரங்கமாக அறிவிப்பது, தேர்தலை நடாத்த வெளிப்படையாக கோருவது என்பன இன்று அரசினால் செய்துவிடக்கூடிய- விரும்பினால் செய்துவிடக் கூடியவைகள்தான்! இதற்கு யாரும் பிணை தேவையில்லை; இதைச் செய்விக்க ஒரு ஐ.நாவும் தேவையில்லை !

ஆக, அரசு தான் தனது பழைய நிலையிலேயே நின்றபடி பிரச்சினை எதுவுமில்லை, அது - வெறும் வெறி கொண்ட பயங்கரவாதிகளின் பிரச்சினை என்று சாதிக்க விரும்புகிறது. ஒரு நூலளவேனும் இறங்கிவர தயாரில்லை என்ற நிலையில் இருக்கும் அரசுக்கு,- தமிழ் பேசும் மக்களை தான் **பிரதிநிதித்துவப் படுத்தவல்லமாறாக ஆட்சி செய்யவே விரும்பு**கின்றேன் என்று சாதிக்கும் அரசுக்கு - ஐ.நா.கோரிக்கை வெறுப்பூட்டுவதில் வியப்பேதும் இல்லை. அதன் கோரிக்கையில் உள்ள விடயங்களை தாம் ஏற்கனவே நடைமுறைக்கு கொண்டுவர 'அர்த்த புஷ்டியுள்ள' முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாக அது தெரிவிக்கிறது.

ஆனால், இதைவிட முக்கியமான உண்மை என்னவென்றால், எல்லா உலக நிறுவனங்கள் , சமாதானக் கழகங்களினதும் முன்னால் தான் ஜனநாயகம், சமாதானம் என்பவற்றுக்காக நிற்பவன் என்று தன்னைக் காட்டிக் கொள்கிற அதே நேரத்தில், தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமையை தொடர்ந்து மறுத்து வருகின்ற தனது நிலைப்பாட்டை தொடர்ந்து பேண இலங்கை அரசு விரும்புகிறது என்பதே இதனால், அதன் ஆட்சித் தலைவர்களிடமிருந்து முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் வெளிப்படுகின்றன. செயலாளரின் கடிதத்தில் கூட இதைக் காணலாம். வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்று கூறும் அதே கடிதம், பாராளுமன்ற தெரிவுக்குழு, உள்நாட்டில் அதற்கான முயற்சி என்றும் சாதிக்கிறது.

அரசு தவிர்ந்த பிற பேரின்வாதக் கட்சிகளும், இனவாத சக்திகளும் யுத்தமே தீர்வு என்று வலியுறுத்துகையில், தனது சமாதான முகமூடியை பாதுகாக்க விரும்பும் அரசு அதை **நடைமுறையில் செய்து கொண்டே** சமாதானப் பேச்சு பேசி வருகிறது. உண்மையில் அனைவருக்குமே தெரிந்த வெளிப்படையான உண்மை - இலங்கை அரச பீடத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் ஆட்சிபீடத்தில் இருக்கும் வரை - **யுத்தமே தீர்வு** என்பதுதான் ! இன்று யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இருசாரர்க்கும் வெளிப்படையாக சொல்லமுடியாவிட்டாலும் அது தான் உண்மை.

அரசு தமிழ் பேசும் மக்களின் மீது யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. புலிகள் அரசினை எதிர்த்து யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். புலிகளின் யுத்தம் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலையைத் தரப் போகிறதோ இல்லையோ இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்த்து யுத்தம் செய்வதைத் தவிர வேறு வழிகளில் தமது விடுதலையை வென்றெடுக்க முடியர்து என்பது மட்டும் உண்மை!

தமிழ் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை மறுத்து அவர்களை அடையாளமற்றவர்களாக்க திட்டமிட்டு நடாத்தப்படும் யுத்தத்திற்கு பதில் வேறெதுவாகவும் இருக்க முடியாதென்பது தான் தர்க்கரீதியான உண்மை!

யுத்தநிறுத்தமும், சமாதான முயற்சியும் தற்காலிகமாக யுத்த அவலங்களிலிருந்து தமிழ் பேசும் மக்களுக்கு நிம்மதியைக் கொடுக்கலாம். ஆனால், அவர்களுடைய விடுதலை - சுதந்திரம் என்பவற்றை இவை பெற்றுத்தரப் போவதில்லை. ஏனென்றால் இந்த முயற்சிகள் எவற்றுக்கும் அடிப்படைகளை ஆராயும் அக்கறை கிடையாது!

கண்மூடிப் பால்குடிக்கும் பூனைகளாக இருப்பவர்களை - அது ஐ.நா வாக இருந்தால் என்ன, வெளியார் தலையீடு தவிர்க்க முடியாதது என்று கோரும் ஈ.பி.ஆர் எல்.எஃப் ஆக இருந்தால் என்ன - உண்மை சட்டை செய்யப் போவதில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணம் இன்று - 7

ஆக்கிரமித்த எதிரி பல்வேறு ரூபங்களில் ஆக்கிரமித்தான். இராவணனுக்குப் பத்துத் தலை. இருபது கரங்கள். இந்த அரக்கனுக்கு எத்தனை கரங்கள்? எண்ணிக்கை தெரியாது.

யாழ்ப்பாணத்தில் மயிலங்கூடலில் ஒருவன் இறக்கின்ற போது கிளிநொச்சி இராமநாதபுரத்தில் இன்னொருத்தி இறக்கின்றாள். வவுனியாவிலும், மன்னாரிலும், மட்டக்களப்பிலும், முல்லைத்தீவிலும், திருகோணமலையிலும் இன்னும் இன்னுமென இறந்தார்கள்.

என் மகனுக்கு என்ன நடக்கும்? யாரினால் சொல்ல இயலும்? உன் அம்மாவின் விதியை எழுதியது யார்? சிறீலங்கா இராணுவமா?

பொம்மர், ஹெலி வந்தால் கிலியும் வருகிறது.

**கிளிநொச்சி** ஏழாம் வாய்க்காலிலுள்ள **இந்து மகா வித்தியாலயம்**. காலை 7.45 மணி இருக்கலாம். பாடசாலையின் முன் பொம்மர் குண்டுகளை வீசியது. தனது தங்கையை சைக்கிளில் ஏற்றி வந்த ஆறாம் வகுப்பு மாணவன் குண்டினால் தன் ஒரு காலை இழந்தான். உதைபந்தாட்டம் அவனுக்கு விருப்பமான விளையாட்டு. முதனாள் இரவுதான் அவனது தாய் கொழும்பிலிருந்து வருகிறபோது ஒரு பெரிய தோல் பந்து கொண்டு வந்திருந்தார். ''கொழும்புக்குப் போறன். வரேக்கை உனக்கு என்ன ராசா வாங்கிக் கொண்டு வாறது?'' எனத் தாய் கேட்டபோது அவன் ''பந்து தான் வேணும்'' என்றான்.

முதனாளிரவு தாய் பந்தை அவனுக்குக் கொடுத்தார். அவன் காலையில் பாடசாலை செல்கிறபோது பின்னேரம் விளையாடப் போகிற பந்தைப் பற்றிய கனவுடன் சென்றான்.

''ஏனென்று நாங்கள் கேட்க யார்?''

அவன் கனவைக் கலைத்தவன் யார்? கனவைக் கலைக்க யாருக்கு உரிமை இருக்கிறது? இதுவெல்லாம் ஏன் நடக்கிறது? ஏனென்று கேட்க நாங்கள் யார்? நாங்கள் வதைபடவும், சாகவும் பிறந்தவர்கள்.

அதே இந்து மகாவித்தியாலயம். மாணவன் காலிழந்த ஒரு மாதத்தின் பின் இது நடந்தது. மாணவர்கள் பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருந்தனர். (ஒன்றுக்குமல்ல; அடிக்கடி பொம்மர் வருகிறது. பதுங்க வேண்டும்.) மதியம் இடைவேளைக்குச் சற்றுப்பின்பாக மூன்று பொம்மர்கள் வருகின்றன. பாடசாலையைச் சுற்றத் தொடங்கியது. (ஏற்கனவே நல்ல அனுபவம் இருக்கிறது.) மாணவர்கள் பதுங்கு குழிக்குள் விழத் தொடங்கினார்கள்.

மாணவர் தலைவர்களில் ஒருவனான **சத்தியமூர்த்தி** மாணவர்களை ஒழுங்குபடுத்தி பதுங்குகுழிக்குள் அனுப்பிக் கொண்டிருந்தான்.

பொம்மர் குண்டுகளை ஏவியது. பாடசாலையின் மைதானத்தை நோக்கிக் குண்டு வேகமாக இறங்கியது. சத்தியமூர்த்தி ஓடத் தொடங்கினான். வேலி. பாய முயற்சித்தான்.

குண்டு வெடித்தது.

சத்தியமூர்த்தியின் நெற்றி பிளந்தது. முதலில் இரத்தமும், பிறகு கறுப்பு, வெள்ளைத் திரவங்களும் அதிலிருந்து வழிந்தன.

சத்தியமூர்த்தி இறந்தது பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

அடுத்த குண்டு அயல் வீட்டில், தாயையும் இரண்டு வயதுக் குழந்தையையும், பலியெடுத்தது. தாய்க்கு வயிறு இல்லை; குழந்தை நித்திரை கொள்வது போல இருந்தது.

இவை மிகச் சாதாரண உதாரணங்கள். இறப்புக்களும் அவ்வாறுதான். மிகச் சாதரணமானவையாக இருந்தன.

யாரோடு நோகலாம்; யார்க்கெடுத்துரைக்கலாம்?

யாவரும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டனர். வியாபாரியின் வேதனையும், துயரும் நீண்ட கதை.

விவசாயியின் துன்பமும், துக்கமும் தொடர் கதை. கூலி விவசாயிகள் பற்றிக் கூறவே தேவையில்லை.

என்ன தொழில் இருக்கிறது? அவன் முன்னர் என்ன செய்தான்?

வெங்காயம் நடப்போகிறார்கள் என்றால், முதலில் மண்வெட்டியால் சாறுவார்கள். (கொத்துவார்கள்) பாத்தி கட்டுவார்கள். புழுதி விதைப்பு அல்லது இறைப்பு விதைப்பு. எதுவோ, விதைக்கிற போது பெண்களுக்கு வேலை கிடைக்கும்; கூலி கிடைக்கும். புல்லுப் பிடுங்குவார்கள். பிறகு வெங்காயம் பிடுங்குவார்கள். தாள்களை அரிவார்கள். மூட்டை கட்டுவார்கள். லொறி நிற்கும்; ஏற்றுவார்கள். அல்லது பிடி கட்டுவார்கள். வீட்டின் கோடியில் கட்டித் தூக்குவார்கள்.



நாரி உழையும் தான்; என்றாலும் நாலு காசு கிடைக்கிறதே.

ஒரு தொழில் இல்லாமல், ஒரு சதம் இல்லாமல், தோட்டம் மூளியாகிக் கிடந்தது. தோட்டத்தில் நெருஞ்சி முள்ளுப் பத்தைகள்.

மண்வெட்டி ஊன்றிக் கால் வைத்த தோட்டத்தில் கறையான் புற்றெடுக்கிறது.

மண்ணெண்ணெய் இல்லை.

மண்ணெண்ணெய் இல்லாததனால் தோட்டம் இல்லை. கலட்டுத் தரை போலக் காய்ந்திருந்தது.

கூலி விவசாயிகளின் குடில்களில் அடுப்பும் காய்ந்திருந்தது.

இராணுவம் ஆக்கிரமித்த பிரதேசங்களிலிருந்து அகதிகளாக மக்கள் சில கிராமங்களின் பாடசாலைகளில் குடிபெயர்ந்தார்கள்.

அக்கிராமங்களின் கூலி விவசாயிகளுக்கும், இடம் பெயர்ந்தவர்களுக்கும் பனம்பழம் பொறுக்குவதில் சண்டை.

பனம்பழம் எதற்கு என்கிறீர்கள்? சாப்பிட.

பனம்பழம் நல்ல சத்து. ஆனால் அதற்காக இவர்கள் சாப்பிடவில்லை. ஒரு நேரத்துப் பசியை இது தணிக்கும். பனம்பழும் தொப்பென்று விழும் சத்தமும், ஓடிச் சிறுவர்கள் பொறுக்கும் சத்தமும் ஆடி, ஆவணி மாதத்தில் விடியப்புறத்தில் கேட்கும்.

தமிழிலக்கிய வரலாறு படித்தீர்களோ? அதில் சங்க காலம் உண்டு. அக்காலத்தில் அகத்திணை மரபு குறிப்பிட வேண்டியது. அகத்திணை மரபு காதலொழுக்கத்தைக் கூறுவது. அகத்திணை மரபில், மருத நிலத்திற்குரிய (வயற் பிரதேசம்) ஒழுக்கம் ஊடல் எனப்பட்டது. பாணர் பரத்தையரிடம் செல்லும் மருத நில ஆடவன், வைகுறு விடியலில் ஒருவர்க்கும் தெரியாமல் இரகசியமாக வீடு வருவான். தலைவி கோபத்துடன் காத்து இருப்பாள். தலைவனுக்கும் தலைவிக்கும் சண்டை. இது ஊடல். புலர்ந்தும் புலராத காலைப் பொழுதில் இது நடைபெறும்.

இதே பொழுதில் தான் இங்கு பனம் பழம் பொறுக்கினார்கள்.

புறநானூற்று வீரம் என்று சந்தோஷப்படுகிறோமே?

இந்த அகத்திணை மரபில் பனம் பழம் பற்றிப் பாட ஒரு வரியும் இல்லையா? யாழ்ப்பாணத்தில் பூதந்தேவனார் ஒருவர் கூடப் பிறக்க வில்லையா?

இதே பனம்பழம் பின்னர் வேறு தேவைகளுக்குப் பயன்பட்டது ஒரு சுவாரசியமான கதை.

அரசாங்கம் யாழ்ப்பாணத்து மக்களுக்குக் கப்பலில் அரிசி, மா,சீனி அனுப்பியது. அவ்வாறு அனுப்பியதில் புலிகள் எடுத்தது போக மீதி மக்களுக்குக் கிடைத்தது. மங்கலாக அரிசி, மஞ்சளாகக் கோதுமை, மண்ணிறமாகச் சீனி. சில சமயங்களில் நெருப்பெட்டி கிடைக்கும். ''ஹைலான்ட்''(High land) என்று ஒரு பால் பவுடர். கரைச்சு ஊற்றினால் நாயும் குடிக்காது. இதுவும் காசுக்குக் கிடைத்து வந்தது.

அரிசிக்கு அழகான பெயர் வைத்தார்கள். **அம்மாப் பச்சை** என்ன காரணம் பற்றி அப்பெயர் வந்ததோ யானறியேன். ஆனால் நிச்சயமாக அது இடுகுறிப்பெயர் அல்ல; காரணப்பெயர்.

'அம்மாப் பச்சை' எல்லோர் வீட்டிலும் தினசரி உணவு. அதனைச் சாப்பிடப் பிரமன் இன்னொரு வாய் படைக்க வேண்டும்.

அந்த அரிசியிலும் ஆச்சரியாமன கண்டுபிடிப்புக்கள் இருந்தன. சோறாக்கக் கூடாது. அதனை இடிக்க வேண்டும். வறுக்காமல் அதனை அவித்துப் பின் பிட்டாக்கினால் சாப்பிடலாம்.

சாப்பிட்டார்கள்.

நுளம்பு குத்தியது. நுளம்புத்திரி கிடையாது. வேப்பம் இலையும், வேப்பங்கொட்டையும், உமியும், சாணியும் சேர்த்து அரைத்து நுளம்புத்திரி தயாரித்தார்கள்.

எதனை விட்டார்கள்?

மண்ணெண்ணெய் இல்லை; வீட்டிற்கு வெளிச்சம் வேண்டும்.

ஜாம் போத்தலை எடு. சைக்கிள் சில்லின் 'வால்வ்' கட்டையை எடுத்து அதன் நுனியை உடைத்து, அதற்கூடாக மிக இறுக்கமாக திரியைச் செலுத்த வேண்டும். அல்லது பேப்பர்த் துண்டு போதும். ஜாம் போத்தலின் அடிப்பாகத்தில் சின்ன மூடி மண்ணெண்ணெய் ஊற்றினால் போதும். மண்ணெண்ணெய்க்குள் சிறு துண்டு பஞ்சைப் போட்டால் அது மண்ணெண்ணெயை உறிஞ்சி விடும். இரண்டு, மூன்று உப்புக் கல்லையும் போட வேண்டும். திரி பஞ்சில் தொடத்தக்கதாக போத்தலின் வாயில் திரியை வைத்துக் கொளுத்த வேண்டும். விடிய விடிய எரிவதற்கு விளக்கு தயார்.

**''பாறை பிளந்து பயன் விளைவிப்பான் என்னூரான்''**

யாரை நீ அடக்குகிறாய்? யாழ்ப்பாணத்தில் பிறந்தவரையா?

அது கடினம்.

அவன் வெல்வான். மடியும் வரை வாழ்வான்; வாழும் வரை வெல்வான்.

பனம்பழத்தையும் இவ்வாறு தான். முதலில் பசித்த போது அதனைச் சாப்பிட்டார்கள். பின்னர் வேறு தேவை வந்த போது அதனை அதற்கு உபயோகித்தார்கள்.

அது பிறகு.

(வரும்)

அருணா பரமேஸ்வரன்

# ஒரு வார்த்தை எழுத விடு

## கலை மதுரம்

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் வழங்கிய **கலை மதுரம்** எனும் கலை நிகழ்வுகள் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்றது.

ராக ரஞ்சனி, நாடகம், கூத்து, பரத நாட்டியம், இசைத் தென்றல் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தன.

கொஞ்சமாவது சொல்வதற்கு இரண்டு நிகழ்ச்சிகள் இருந்தன.

**இப்படிக்கு உணர்வுகள்** என்கின்ற நாடகம் குறிப்பிட வேண்டியது. இந் நாடகத்தை எழுதியவர், நெறியாள்கை செய்தவர் பெயர்கள் பிரசுரத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கவில்லை. அரங்க நிர்வாகம் என **எம். எக்ஸ். ஜே. கனிசியஸ்** எனும் பெயர் இருந்தது. அவர்தான் நாடகத்திற்கும் முழுப் பொறுப்பு என நான் நினைக்கிறேன்.

நாடகம் சொல்ல வருகிற விடயம் இதுதான்: மிகச் சாதாரண மனிதன். அவனை அவனது உணர்வுகள் அலைக்கழிக்கின்றன. அவன் தனித்து ஒரு முடிவும் எடுக்க முடியாதவனாக உள்ளான். படிக்க முயற்சி செய்கிறான். அவன் உணர்வு அவனைப் படிக்க விடாமல் அலைக்கழிக்கிறது. பல்கலைக் கழகம் அவனுக்குக் கிடைக்கிறது. அரசியல்வாதியைப் பார்த்துப் பிரமை கொள்கிறான். அரசியல்வாதியானால் என்ன எனும் சபலம் தட்டுகிறது. பல்கலைக் கழகப் படிப்பை மேற்கொள்கிறான். வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவனால் இவனது உணர்வுகள் ஆட்கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டுக்குப் போனால் என்ன என யோசிக்கிறான். இறுதியில் அவன் தன்னை ஆட்டிப் படைக்கிற உணர்வுகளை வெல்கிறான்.

கருத்து நிலைப்பட்டு இது மிக முக்கியமான தொன்று எனச் சொல்லி விட முடியாது. அதற்காக இதில் ஒன்றுமில்லை எனத் தள்ளி விடவும் முடியாது. சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதொன்று. உணர்வுகளால் அலைக்கழிக்கப்படுகிற ஒருவனாக நடித்த **அ.ராஜ்குமார்** சிறப்பாக நடித்திருந்தார். அரசியல்வாதியாக நடித்த **பா. பாலநந்தகுமாரின்** நடிப்பும் குறிப்பிட வேண்டியது. மற்றையவர்களது நடிப்பு குறைபாடுடையது என்றல்ல. ஆயினும் இருவரது நடிப்பிலும் அரங்கத் தன்மை தெரிந்தது.

நாடகம் தன் இயல்பான ஓட்டத்தில் செல்கின்ற போது இடையிடை கவிதை மாதிரியான வசனம் பேசுபவர் **(எஸ். அந்தனிதாஸ்?)** நாடக ஓட்டத்தைக் குழப்புகிறார். இயல்பாக இருக்கிற நாடகத்திற்கு இது குறிப்பிடத்தக்க இடையூறுதான். இது கவனிக்க வேண்டியது.

நான் நினைக்கிறேன் -நாடகத்திற்கு உத்திகள், குறியீடுகள் எனும் புத்திசாலித்தனமான காரியங்களை நிறுத்தி விட்டு, **நிகழ்த்திக் காட்டல்** எனும் படைப்பாற்றல் மிக்க அம்சத்தை நாடகத்தில் வலியுறுத்துவது அவசியம். இது விமர்சனத்திற்குரியது தான் என்றாலும், இது குறித்து நாடக ஆர்வலர் சிந்திப்பது நலம்.

**இப்படிக்கு உணர்வுகள்** ஒரு தரமான படைப்பு என நான் சொல்ல மாட்டேன். ஆனால் வித்தியாசமான படைப்பு என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து இல்லை.

தரமான படைப்பு என நான் வாய் கூசாமல் கூறுவேன் **'இராவணன் வதம்'** எனும் நாட்டுக் கூத்தினை. பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் இந் நாட்டுக் கூத்தினையிட்டு பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

வடமோடித் தன்மை வாய்ந்த, மன்னார் வகை நாட்டுக் கூத்து இது என்று நான் நினைக்கிறேன். சும்மா சொல்லக்கூடாது; நன்றாகத்தான் இருந்தது இது. நெறியாள்கை செய்த **கு.ஜோ.டெ.குரூஸ், பெ.ஜோ. கஸ்ரர்** இருவரும் உங்கள் கைகளைக் காட்டுங்கள் -பற்றிக் குலுக்குவதற்கு.

இருவரும் நன்றாக நடிகர்களை ஆட்டிப் படைத்திருக்கிறீர்கள். (இப் பொருளை சிலேடையாகக் குறித்துக் கொள்ளுங்கள்.)
பொதுவாக நாட்டுக் கூத்துக்கள் அரங்கத் தன்மையில் முழுமைபெற்று விடுவதனை நான் காணவில்லை. நாட்டுக் கூத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களை உள்வாங்கிய நவீன நாடகங்கள்(மௌனகுருவின் **சங்காரம்**, தாசீசியசின் **பொறுத்தது போதும்)** அரங்கத்தை முழுமையாகப் பயன்படுத்தியிருந்தது. இந் நாட்டுக் கூத்து அரங்கத்தன்மை முழுமையுடன் அற்புதமாக வெளிப்பட்டது.

எல்லோர்க்கும் தெரிந்த இராமாயணக் கதைதான். கூத்தாகப் பார்க்கிற போது இன்னொரு பரிமாணம் தெரிகிறது. இலங்கை வேந்தனின் வீரம் சக்தி பூர்வமாக கூத்தினால் வெளிப்படுகிறது. ஆட்டத்தின் தன்மையினால் இராவணனின் வீரத்தின் முன் இராமனின் வீரம் எடுபடவில்லை.

இராவணனாக நடித்த **பெனடிக்ற் இராஜேந்திரன்** அனுமானான **சி.சிவகுமார்** அங்கதனான **அருட் சகோதரன் கருணாகரன்,** இலக்குவன் தோற்றம் கொண்ட **க.கண்ணன்,** இராமனான **சி. செந்தூரன்** இவர்கள் குறிப்பிட வேண்டியவர்கள். ஆட்டத்தின் தன்மையினாலேயோ என்னவோ இராவணன், அனுமான், அங்கதன், கும்பகர்ணன் ஆகியோரது ஆட்டங்கள் வேகத்தைக் கொடுக்கின்றன. அரங்கம் முழுவதும் சுற்றிச் சுழன்று ஆடியது இன்னும் என் கண்முன் நிற்கின்றது.

நான் நினைக்கிறேன்: அரங்கத் தன்மை முழுமை பெற்ற ஒரு முக்கிய நாட்டுக் கூத்து இது என்று.

இறுதியாக **இசைத் தென்றல்** என்று தமிழ்ச் சினிமாப் பாடல்கள் பாடினார்கள். தென்றலா? புயலா? தெரியவில்லை. ட்ரம்ஸின் முழக்கமும், அணைந்து அணைந்து எரிகிற மின் விளக்கும் இசையைத் தென்றலாகக் காட்டவில்லை, புயலாக்கியது. தமிழ்ச் சங்கத்திடம் ஒரு கேள்வி -தமிழ்ச் சினிமாப் பாடல்களைப் பாடுவதற்கு மோகன், ரங்கன் என்று நிறையப் பேர் இருக்கின்றனர். அவர்கள் உங்களிலும் பார்க்க மிகச் சிறப்பாக இத்தகைய நிகழ்ச்சிகளைத் தயாரிக்கக் கூடியவர்கள் என்றும் நான் நினைக்கிறேன். தங்களுக்கு இது தேவைதானா? **இராவணன் வதம்** போல வாலி வதையைச் செய்யுங்கள். **இப்படிக்கு உணர்வுகள் போல,** அதிலும் சிறப்பாக இன்னொரு நாடகம் படையுங்கள்.


பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு அது அழகு. இசைத் தென்றல் போன்ற நிகழ்ச்சிகளை யார் உங்களிடமிருந்து எதிர்பார்த்தார்கள்?

இறுதியாக,'சரிநிகர்'க்கு அனுமதிச் சீட்டோ, அன்பளிப்புச் சீட்டோ கிடைத்து இந் நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு இக் குறிப்புக்களை எழுதுகிறேன் என்று ஒருவரும் நினைக்க வேண்டாம். ஆர்வம் காரணமாக, ஐம்பது ரூபா நுழைவுச் சீட்டு எடுத்து (அதுவே மிகக் குறைந்த கட்டணம்) உள்ளே நுழைந்து பார்த்த நிகழ்ச்சிகள் தாம் இவை.

சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்





**மலேசியாவின் முக்கியமான சமூகவியல் அறிஞரும் மனித உரிமைகள், குடியுரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம் போன்றவற்றுக்காக நீண்ட காலமாகப் போராடி வரும் சந்ரா முஸாஃபர் சர்வதேச அரங்கில் மதிக்கப்படும் ஒரு போராளியுமாவார்.**

**மலேசியாவில் அவர் வெளியிட்டு வரும் 'அலிரான்' என்ற மாற்றுப் பத்திரிகை ஒரு பெரிய சமூக இயக்கமாகவே இன்று உருப்பெற்றுள்ளது.**

**அந்நிய மேலாட்சி, ஏகாதிபத்தியம் என்பவற்றை எதிர்ப்பது மட்டுமல்ல மூன்றாம் உலகச் சமூகங்கள் தொடர்பாகவும் விமர்சன ரீதியான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் சந்ரா முஸாஃபர்.**

**சோவியத் யூனியனும், வைதீகக் கொம்யூனிசமும் உடைந்து போன பிற்பாடு எதிரிகள் இல்லாத நிலையில் ஒரு புதிய எதிரியை உருவாக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இருக்கின்றது. ''அரபுப் பயங்கரவாதி''யிலும் இஸ்லாமிய அடிப்படை வாதத்திலும் தான் அமெரிக்கா இந்த எதிரியை இன்று உருவாக்கி வருகிறது என்பதை ஆதாரங்களோடு விளக்கும் முஸாஃபரின் கட்டுரை இஸ்லாமிய அடிப்படை வாதம் கிளப்பும் பிரச்சினைகளையும் பார்க்கத் தவறவில்லை.**

# இஸ்லாம்:- மேற்கின் கண்ணோட்டங்கள்

சந்த்ரா முஸாபர்

முஸ்லீம்கள் சிலரால் சொல்லபபடுவது போன்று இஸ்லாத்தின் மீதும், முஸ்லீம்களின் மீதும் அமெரிக்கா தீவிரப் பகைமையுடன் இருக்கிறதா?

தீவிர பகைமை என்ற பதம் அதிக தாக்கத்திற்குரியதாக இருக்கலாம் என்ற போதிலும், உண்மையில் மேற்கத்திய சமூகங்களிலும் உள்ள வெளிப்படையாகத் தெரியக் கூடிய செல்வாக்கு மிக்க பிரிவினர் இஸ்லாத்தின் மீதும், முஸ்லீம்கள் மீதும் பாதகமான (negative) மனோபாவங்களை அனைத்து வழிகளிலும் கொண்டிருப்பதன் மூலம் குற்றவாளிகளாக இருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஒரு முனையில் தப்பெண்ணங்களுடன் கூடிய உதாசீனத்தின் மூலமும், மறுமுனையில் எதிர்ப்புடன் கூடிய வெறுப்பின் மூலமும் இந் நிலைமை தொடர்கின்றது.

இத்தகைய எதிர்மறையான மனோபாவங்கள் மேற்கத்திய மனோநிலையில் ஆளப் புதைந்திருக்கின்றன. கடந்த ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக காலத்திற்குக் காலம் இத்தகைய மனோபாவங்கள் மதம் மற்றும் அறிவுத் துறைக்கூடாகவும் ஐதீகம் மற்றும் இலக்கியத்திற்கூடாகவும், கல்வி மற்றும் தகவல் சாதனங்களினூடாகவும், உள்நாட்டு அரசியல் மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளினூடாகவும் வெளிப்பட்டு வந்திருக்கின்றன.

இத்தகைய முயற்சிகள் 12ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பிக்கின்றன. உதாரணமாக குர்ஆனைப் பிழையாக மொழி பெயர்ப்பதினூடாக இஸ்லாத்தையும், முகமது நபியையும் அவமானப் படுத்துவதற்கான முயற்சிகளை கிரிஸ்தவ தேவாலயங்கள் மேற்கொண்டு வந்திருக்கின்றன. முஸ்லீம்களின் வ்ரலாற்றை இழிவுபடுத்துவதற்கும் முஸ்லீம் சமூகத்தை களங்கப்படுத்துவதற்குமாக திட்டமிட்ட ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கமைவாக அராபிய சர்வாதிகாரிகளைப் பற்றியும் இரத்த தாகம் கொண்ட முஸ்லீம் ஆக்கிரமிப்பாளர்களைப் பற்றியும் மத்திய கால ஐரோப்பாவில் குறிப்பிடத்தக்க கேவலமான கருத்துக்கள் உருவாகின. இந்த விதமான ஒழுக்கம் குறித்த கருத்துக்கள் அலங்கரிக்கப்பட்ட அந்தப்புரங்களில் விலைமாதர்களுடன் அராபிய சேக்குகள் நடத்திய காமலீலைகள் பற்றிய அவலட்சனமான வர்ணனைகள் மூலம் மேலும்மேலும் மெருகூட்டப்பட்டன. தாந்தே, ஷேக்ஸ்பியர் மற்றும்" பைரன், ஷெல்லி போன்ற புகழ் பெற்ற ஐரோப்பிய நாடகாசிரியர்களினதும், கவிஞர்களினதும் எழுத்துக்களில் கூட குர்ஆன், முகமது நபி, மற்றும் முஸ்லீம்கள் குறித்து ('Moors' பண்படாதவர்கள் Saracens நாடோடிகள் என்ற வகையில்) இழிவு படுத்தும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவை அன்றிலிருந்து இன்று வரை பல ஐரோப்பிய மாணவர்களின் அறிவுத் துறைக்குரிய பொதுவான பகுதிகளாக மாறியிருக்கின்றன

## இஸ்லாமிய அச்சுறுத்தல்:

இன்று, முக்கியமான மேற்கத்திய தகவல் சாதனங்கள், இஸ்லாத்தை ''தீவிரவாத இஸ்லாம்'' அல்லது ''அடிப்படைவாத இஸ்லாம்'' என்று விபரிப்பதன் மூலம் மேற்குநாடுகளுக்கு அதை ஒரு அச்சுறுத்தலாக காட்டுகின்றன. 1981ல், எட்வேட் ஸயித் (Edward Said) பின்வருமாறு எழுதுகிறார்: ''இன்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பொதுமக்களுக்கு இஸ்லாம் என்பது, குறிப்பாக ஒரு விரும்பத்தகாத ''செய்தியாக'' இருக்கின்றது. தகவல்துறை, அரசாங்கம், புவியியல் சார்ந்த அரசியல் மூலோபாயங்கள் என்பவற்றுடன் அறிவுத்துறை மேதாபிகளும் - இவர்கள்தான் பெருமளவில் கலாசாரத்தின் உச்சநிலையாக விளங்குகின்ற போதிலும் - இஸ்லாம் சம்பந்தப்பட்ட இந்த விடயத்தில் உடன்படுகின்றார்கள். அதாவது இஸ்லாம், மேற்கத்திய நாகரீகத்திற்கு ஒரு அச்சுறுத்தல். இவ்வாறு கூறுவது மேற்கில் இஸ்லாம் என்பது இழிவான முறையில் அல்லது இனவாத (racist) கேலிச்சித்திரங்களின் வழியில் மட்டுமே கண்டு கொள்ளப் படக்கூடியதாக இருக்கின்றது என்ற அர்த்தத்தில் அல்ல. நான் இங்கு கூறுவது என்னவென்றால், இஸ்லாத்தைப் பற்றிய எதிர்மறையான மதிப்பீடுகள் தான் (negative images of Islam) ஏனைய எல்லாவற்றையும் விட மிக அதிகமாக மேலோங்கியிருக்கின்றன என்பதைத்தான். அத்துடன் இத்தகைய மதிப்பீடுகள் இஸ்லாம் என்றால் என்ன என்பதுடன் தொடர்புபடவில்லை; மாறாக, குறிப்பிட்ட சமூகத்தின் பிரதான பிரிவினர், இஸ்லாம் எப்படியிருக்கின்றது என்று கூறுவதுடன் தொடர்புபடுகின்றது. இந்தப் பிரிவினர் தான் ஏனைய அனைத்துப்பிரிவின்ரையும் விட மிகவும் மேலோங்கியும், மிகவும் வெள்ளிப்படையாகவும் இருக்கின்றனர்.''

மேற்க்குக்கான ''அச்சுறுத்தல் என்ற கருத்து ஏதும் இருப்பின், அது 90களிலேயே இன்னும் வலுவானதாக மாறியிருக்கின்றது. இஸ்லாம் குறித்து எழுதுபவர்களில் நடுநிலை வகிக்கின்ற ஒருசில முஸ்லீம் அல்லாத அமெரிக்கா அறிஞர்களில் ஒருவரான ஜோன் எஸ்பொசிடோ (John Esposito) தனது அண்மைய புத்தகத்தில் கூறுகிறார்: ''சில வழிகளில், கம்யூனிஸம் குறித்த மேற்கின் மனோபாவம், 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' என்னும் புதிய அச்சுறுத்தல் நோக்கித் திருப்பப்படுவது போல சில சமயங்களில் தோன்றுகிறது'' பிரதானமான மேற்கத்திய சமூகத்தினரிடையே மதம் குறித்த இத்தகைய கண்ணோட்டங்கள் ஏற்படுவதில், இஸ்லாம் பற்றிய ஒருதலைப்பட்சமான ஆய்வுகளும், அதன் உண்மைகளில் தெரிந்தெடுக்கப்பட்டவற்றை மாத்திரம் அறிமுகப்படுத்துவதும் பங்காற்றியிருக்கின்றன என்று அவர் கூறுகின்றார். ''இதன் விளைவாக, இஸ்லாமும், இஸ்லாமிய எழுச்சியும், மேற்க்குக்கு எதிரானது என்றும், நவீனத்துவத்திற்கு எதிரான இஸ்லாத்தின் போர் என்றும் அல்லது முஸ்லீம் வன்முறை, தீவிரவாதம், மதவெறி, பயங்கரவாதம் என்றும் மிக இலகுவாக திரும்பத் திரும்ப குறுக்கப்படுகின்றது. 'அடிப்படைவாதமும்' 'பயங்கரவாதமும்' பலரது சிந்தனைகளில் இணைக்கப்பட்டு விட்டன. ஆகவே ஒரு தலைப்பட்சமான ஆய்வுகள் எங்களுக்கு அறிவைக் கொடுப்பதை விட, எமது அறியாமையைக் கூட்டுகின்றன; எங்களது புரிந்துணர்வை விசாலப்படுத்துவதற்குப் பதிலாக, அதைக் குறுக்குகின்றன; புதிய தீர்வுக்கான பாதையைத் திறப்பதைவிட, பிரச்சினையை மேலும் தீவிரமாக்குகின்றன.

ஏராளமான சந்தர்ப்பங்களில், மேற்கின் - குறிப்பாக அமெரிக்காவின் - கொள்கை வகுப்பாளர்களும் அரசியல்வாதிகளும் இத்தகைய அறியாமையை, குறுகிய விளக்கத்தைத் தமது தன்னலம் சார்ந்த (Self Serving) வெளிநாட்டுக் கொள்கை வடிவங்களை முன்னெடுத்துச் செல்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக ஈரானிய புரட்சி, மற்றும் பயணக் கைதிகள் விவகாரத்திற்குப் பின்னர், பிரதான அமெரிக்கத் தொலைக்காட்சித் சேவைகள் அனைத்தையும், 'தீவிரவாத இஸ்லாம்' ஷியாக்கள், கொமெனி, முல்லாக்கள், பர்தா...என அனைத்திற்கும் எதிரான வெகுஜன எதிர்ப்பைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தினார்கள். 13 வருடங்களுக்குப் பின்னர், 1993.02.26இல் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக நிறுவனத்தில் குண்டுவெடித்த போது, இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றியும், இஸ்லாமிய பயங்கரவாதம் பற்றியுமான அதே கூக்குரலை - குறைந்த சுருதியாக இருந்த போதிலும் - கேட்க முடிகிறது. உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்கள் இல்லாதிருந்தும் கூட, அமெரிக்கப் புலனாய்வுத் துறையினரும் முக்கியமாக அமெரிக்கத் தகவல்துறையும் இந்தக் குண்டுவெடிப்பு, 'இஸ்லாமியப் பயங்கரவாதிகள்' என அழைக்கப்படுகின்ற இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் வேலை தான் என்ற முடிவுக்கு வந்துள்ளன. இக்குண்டுவெடிப்பில் வேறுபிரிவினரை - குறிப்பாக இஸ்ரேலிய மொஸாட்டை - சுட்டிக் காட்டக் கூடிய ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும் கட, அமெரிக்க ஸ்தாபனங்கள் முஸ்லீம்கள் மீதே குற்றம் சுமத்துவதற்க்குத் தீர்மானித்திருக்கின்றன. ஜேன் ஹன்டர் (Jane Hunter) பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்: ''...மத்திய கிழக்கைப் பற்றி எதுவும் தெரிந்திராத ஒரு சமூகத்தில், அனைத்து அராபியரும், முஸ்லீம்களும் வெறுப்பிற்குரிய முறையில் முத்திரை குத்தப்படுவதற்கான அபாயம் இருக்கின்றது....''

## சிலுவைப் போர்களும், வெற்றியும்:

முஸ்லீம்கள் ஏன் இவ்விதம் முத்திரை குத்தப்பட வேண்டும்? முஸ்லீம்கள் மீது ஏன் இந்த எதிர்ப்பும் ஒருதலைப்பட்சமான முடிவுகளும் மேற்கத்திய சமூகத்தின் குறிப்பிட்ட முக்கியமான பிரிவினரிடையே நிலவுகின்றன என ஒருவர் கேட்கலாம். இக்கேள்விகளுக்கான ஒரு பகுதி விளக்கத்தை மேற்கு, கிழக்கு, தெற்கு ஐரோப்பிய பகுதிகளின் மீது முஸ்லீம்கள் பெற்ற வெற்றியிலும், நூற்றாண்டு காலமாக அப்பிரதேசங்களை அவர்கள் ஆக்கிரமித்திருந்திலும் இருந்து அறிந்து கொள்ளலாம். முஸ்லீம் ஆட்சியாளர்கள் தமது ஆட்சிக்குட்பட்டிருந்த கிறிஸ்தவ, யூத சமூகத்தவரைப் பொறுத்தவரை எல்லாவிதத்திலும் நீதியாகவும், நேர்மையாகவும் நடந்து கொண்ட போதிலும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அந்நிய நெறியாளர்களான முஸ்லீம்கள் மீது ஒரு குறிப்பிட்ட அளவான பகைமை யூத, கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தே வந்தது. அத்துடன் மேற்கு ஆசியாவின் அராபிய முஸ்லீம்களின் நிலங்களை ஆக்கிரமித்த, கிறிஸ்தவ ஆக்கிரமிப்பாள்ர்களின் தோல்வியுடன் முடிவடைந்த இழிவான சிலுவைப் போர்களும் கூட இஸ்லாத்தின் மீதும், அதைப் பின்பற்றியோர் மீதுமான ஐரோப்பிய எதிர்ப்பைத் தூண்டின.

மேற்கத்திய நாகரீகம் இஸ்லாத்திடமிருந்தும், முஸ்லீம்களிடத்திலிருந்தும் தான் பெற்றுக் கொண்ட மாபெரும் கடனின் முக்கியத்துவத்தைக் குறைப்பதிலும், கூடவே உதாசீனப்படுத்துவதிலும் உணர்பூர்வமாகச் செயற்பட்டு வருவது, ஐரோப்பாவின் தீவிர இஸ்லாமிய எதிர்ப்பை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது. மருத்துவம் மற்றும் அல்ஜிப்ராவிலிருந்து சட்டம், அரசாங்கம் வரை அனேகமாக வாழ்வின் ஒவ்வொரு முனையிலும் மத்தியகால ஐரோப்பிய வளர்ச்சிக்கான அடித்தளத்தை இஸ்லாம் அமைத்திருந்தது. புகழ் பெற்ற ஐரீஸ் அறிஞர் எர்ஸ்சின் சில்டெர்ஸ் (Erskine Childers) கூறுகிறார்: அப்போது ஐரோப்பா கட்ட ஆரம்பித்திருந்த அதன் வரலாற்று பூர்வமான சாதனைகள் ஒவ்வொன்றிற்கும் அவசியமான அறிவுத்துறைகளுக்கு ஐரோப்பிய அரசர்களும், மதத்தலைவர்களும் மற்றும் அறிஞர்களும் அராபிய அறிவுத்துறைக் கண்டுபிடிப்புகளையே நாடிச் செல்ல வேண்டியிருந்தது. மேற்கத்திய வரலாற்றுத்துறையின் சிந்தனையிலும், பார்வையிலும் மறைக்கப்பட்டிருக்கின்ற இந்த அராபிய பராம்பரியத்தைக் கற்றுக் கொள்ள முயல்கின்ற எந்தவொரு மேற்கத்திய வரலாற்றுத்துறை மாணவனும், மேற்கத்திய கல்வியில் காணமுடியாத உண்மைகளின் தொகுப்பை இங்கு காணமுடிவது பெரும் வியப்பிற்குரியது. ஏனெனில் இந்த நிரூபனங்கள் இன்றைய மேற்கத்திய மொழியில் சொல்லுக்குச் சொல் சரியாக இருக்கின்றன. ''இவ்விதம் இஸ்லாத்தின் அறிவியல் சார்ந்த பாரம்பரியத்தை ஏற்றுக் கொள்வதற்கு மேற்கு காட்டுகிற தயக்கத்தை ஒரு ''கூட்டு மறதி'' என ( Collective Amnesia) சில்டெர்ஸ் விபரிக்கிறார்.

..வரும்..

நன்றி - நூலகத்திட்டம்





சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு -03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் உ. சேரன்

# நீங்கள் எந்த ரகம்?

மூன்று வருடங்களாகப் புலிகளின் சிறையிலிருக்கிற பொலிஸாரை விடுவிக்கப் போன பெற்றோர் திரும்பி வந்திருக்கிறார்கள்; வெறுங்கையுடன்.

வந்தவர்கள் பிள்ளைகளைப் பிரிந்து வந்த துயருடன் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் 'எந்தவித நிபந்தனையுமில்லாமல் எமது பிள்ளைகளை விடுவிப்பது தொடர்பாகப் புலிகளுடன் பேசிக் கொண்டிருந்தோம். இடையில் அரசு பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவை அனுப்பி எல்லாவற்றையும் கெடுத்து விட்டது' என்று தெரிவித்திருக்கிறார்கள். அரசு தலையிட்டதால்தான் புலிகள் நிபந்தனை விதித்தார்கள் என்பது அவர்களது அபிப்பிராயம்.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்கி வடபகுதிக்குப் பொருட்கள் சேர்வது உறுதிப்பட்டதும் பொலிஸாரை விடுவிப்பதாகக் கூறியிருந்தார்கள் புலிகள்.

உடன்பாட்டை ஏற்றுக் கொண்டு கொழும்புக்கு வந்த ஆனந்த விஜய சேகராவும், அரசாலும் எதிர்க்கட்சியினர், பௌத்த மகா சங்கத்தினர், படையினர் போன்றவர்களிடையேயிருந்து எழுந்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை; அரசு முயற்சிக்கவில்லை; முயற்சிப்பதற்கு முதுகெலும்புமில்லை.

அரசுக்கு, எதிர்க்கட்சியினருக்கு, மகாசங்கத்தினருக்கு என அனைவருக்குமே 33 பொலிஸாரை விடுவிப்பதை விட வடபகுதி மீதான பொருளாதாரத் தடை முக்கியமானதாக இருந்தது. ''புலிகள் புதிய நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள், வடபகுதிக்கு அனுப்பிய கப்பலைக் கடத்தினார்கள், கொள்ளையடித்தார்கள்'' எனப் புரளியைக் கிளப்பி விட்டன தென்னிலங்கைப் பத்திரிகைகள்.

இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பிள்ளைகளை அழைத்துவரக் காத்திருந்த பெற்றோர் திரும்பியிருக்கிறார்கள்.

விடயம் அதுவல்ல.

ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன்னர் புலிகளைக் கொன்றொழிக்க என்றே போரிட்ட போது களத்திலே கைது செய்யப்பட்டவர்கள் தான் இந்தப் பொலிஸார் எதிரிப்படையாக நின்று போரிட்டவர்கள்.

அந்தப் பொலிஸார் தமது விடுதலை கோரி புலிகளது சிறையினுள்ளேயே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இவர்கள் உண்ணாவிரதம் இருந்த செய்தி புலிகளின் குரலிலும், யாழ்ப்பாணத்துப் பததிரிகைகளிலும் முக்கியத்துவம் பெற்றது

இது தவிர சிறையிருந்த பொலிஸார் ஒருவரது மனைவி யாழ்ப்பாணம் போனதும், இரண்டு மாதங்கள் அவருடன் தங்கியதில் கருவுற்றதும், தனது நிலையை அந்தப் பெண்மணி புலிகளின் தலைவருக்கு அறிவித்ததும், இந்தக் கருணை மனுமீது தலைவர் கருணை கூர்ந்து விடுவித்ததும் என்று ... நிகழ்ச்சிகள் நம்மைப் 'புல்லரிக்க'' வைக்கின்றன.

நல்லது; எதிரிக்கும் கருணை காட்டுகிற பண்பு!

ஆனால் உதைக்கிற இடம் ஒன்றுள்ளது.

எந்தக் காரணமும் இல்லாமல், அல்லது சொல்லாமல் ஏராளமானவர்களைச் சிறைவைத்திருக்கிறீர்கள் என்கிற போது தான் உங்களது கருணை, மனிதாபிமானம், போன்ற எல்லாவற்றின் மீதும் உக்கிரமாய் ஒரு கேள்வி மேலேழுகிறது.

உங்களால் கைது செய்யப்பட்ட/கடத்தப்பட்ட கேசவன், செல்வி, தில்லை, ரமணி, அன்ரன் என்று நூற்றுக்கணக்காய் இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் யாருமே தமிழ் மக்களுடைய விடுதலைக்கு எதிரானவர்கள் அல்ல என்பது வெளிப்படை. இன்னும் சொல்லப் போனால் -வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பினும்- தமிழ் மக்களது விடுதலை, ஜனநாயகம், சுதந்திரம் என்பன குறித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் என்றும் கூறலாம்.

இவர்களைக் கைது செய்தது தொடர்பாக நீங்கள் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பெற்றோர்/உறவினர்கள் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இன்னமும் உயிருடன் உள்ளார்களா? அல்லது மரணதண்டனை விதித்தாகி விட்டதா என்றும் அறிவிக்கவில்லை.

அரசின் காரணமற்ற கைதுகளையும், கடத்தல்களையும் குறித்து உலக அரங்கிலும் மனித உரிமைகள் மாநாடுகளிலும் விசனம் தெரிவித்து வரும் நீங்கள் இவர்கள் பற்றி மட்டும் மௌனம் சாதித்து வருகிறீர்கள் அல்லது இவர்கள் பற்றி கேள்வி எழுப்புகிறபோது பதுங்கிக் கொண்டிருக்கிறீர்கள். 'எங்களுக்கு யார் விரோதியோ அவர்கள் தேசத்துக்கு விரோதிகள், நாங்கள் தான் தேசம், தேசம் தான் நாங்கள்' என்கிற உங்களது தீர்ப்புக்கு எவ்விதமான அறிவார்த்தமும் கிடையாது.

ஆக, அனைத்துத் தமிழ் பேசும் மக்களதும் சார்பில் நாம் உங்களிடம் கேட்பது இதைத்தான்.

ஒன்று: இவர்களையும், இவர்கள் போன்ற நூற்றுக்கணக்கானோரையும் எதற்காகக் கைது செய்தீர்கள்?

இரண்டு: இவர்கள் மீதான உங்கள் குற்றச் சாட்டுத்தான் என்ன ?

மூன்று: உங்களால் சிறை வைக்கப்பட்ட எதிரிப்படையினரையும், கிறிமினல்களையும் உறவினர் வந்து பார்வையிட அனுமதிக்கிற நீங்கள் இவர்களைப் பார்வையிட அனுமதிப்பதில்லையே ஏன்?

நான்கு: இவர்கள் மீதான விசாரணை முடிந்து விட்டதா? முடிந்தால் நீங்கள் விதித்த தண்டனை என்ன? ஆயுட்காலமா? மரணதண்டனையா?

மரண தண்டனையானால் நிறைவேற்றி விட்டீர்களா? அல்லது எப்போது?

சொல்லாமல் செய்வர் பெரியர்; சொல்லிச் செய்வர் சிறியர்; சொல்லியும் செய்யார் கயவர் என்பது தமிழ் மூதுரை.


நீங்கள் எந்த ரகம்?



# வடக்கின் சிறைகளுக்குள்

விடுதலைப்புலிகளின் சிறைச்சாலைகளில் கைதிகளாகத் துன்புறுவோரின் எண்ணிக்கை 4000 என்று மதிப்பிடப்பட்டிருந்தது. துணுக்காய் வதை முகாமில் 3000 பேரும் வேறு இடங்களில் 1000 பேரும் என்பதே முன்னைய தகவல். துணுக்காய் வதை முகாம் மூடப்பட்டுவிட்டதாகவும் அங்கு சிறையிலிருந்தோர் ஏனைய முகாம்களுக்கு மாற்றப்பட்டு விட்டதாகவும் இப்போது தெரியவருகிறது.

கச்சாய், கோயிலாகண்டி, ஊரெழு, கோப்பாய் மாவீரர் மண்டபம், சுண்டிக்குளி, அரியாலை, மற்றும் சாவகச்சேரியையும் அதனை





அண்டியுள்ள பிரதேசங்களிலும் பத்து முகாம்களுமாக ஏராளமான வதை முகாம்கள் இப்போது உள்ளன. விடுதலைப்புலிகளின் முகாம்களிலுள்ள பங்கர்களுக்குள் சிறைக்கைதிகள் அடைக்கப்பட்டிருப்பது கரவெட்டி மக்களுக்குத் தெரிந்த விடயமாகும். சில வதைமுகாம்களில் முப்பது பேர் வரை உள்ளனர். கோயிலாகண்டி வதை முகாமில் நூற்றுக்கணக்கானோர் உள்ளதாகத் தெரிகிறது. தென்மராட்சியின் பெரிய தென்னந் தோப்புக்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கும் வதை முகாம்களில் நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எல்லா முகாம்களிலும் சித்திரவதை இடம்பெற்று வருகிற போதிலும் முல்லைத்தீவுக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள காடுகளிடையே அமைக்கப்பட்டுள்ள வதைமுகாம்களிலேயே துன்புறுத்தல் மிகவும் மோசமாக இடம்பெறுவதாக அறியக் கிடக்கிறது. மாங்குளத்துக்கு அண்மையில் இருக்கும் மல்லி முகாமில் வைக்கப்பட்டிருந்த ஒருவரின் தகவலின்படி, இருபதிலிருந்து முப்பது பேர்வரை ஒரு பங்கருக்குள் சிறையிடப்பட்டுள்ளனர். கச்சாய் முகாம், இலங்கைப்படையின் குண்டு வீச்சுகளுக்கு இலக்கான போது ஐம்பது சிறைக்கைதிகள் தப்பியோட வழியற்றுக் கொல்லப்பட்ட செய்தி ஏலவே வெளியாகி இருந்தது.

## காந்தியின் கதை

துணுக்காய் வதை முகாமின் 'வெட்டியான்' என்று வழங்கப்பட்ட காந்தியைப்பற்றிய கதை இது. இந்திய இராணுவத்திற்குத் தகவல் வழங்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் மயிலிட்டியைச் சேர்ந்த மாம்பழம் என்பவர் புலிகளால் பிடிக்கப்பட்டார். மாம்பழமும் வேறு பத்துப் பேரும் முகாமில் வைத்துச் சித்திரவதைக்கு உள்ளான போது கற்கண்டு எனும் மற்றொரு கைதி மாம்பழத்தையும் பலாலியைச் சேர்ந்த இன்னொருவரையும் தனக்குத் தெரியும் எனச் சொன்னார். உடனே நீட்டுத்தடி ஒன்றினால் மாம்பழத்தைத் தாக்கினார் காந்தி. தொடர்ந்து சூழவர நின்ற புலிகளும் காந்தியும் மாம்பழத்தை அடித்துக் கொன்றார்கள்.

துணுக்காய் வதை முகாம் மூடப்பட்ட பிற்பாடு கோயிலாகண்டி முகாமிற்கு மாற்றம் பெற்றார் காந்தி. ஓகஸ்ட் 1990 இல் கச்சாய் வதைமுகாம் குண்டுவீச்சில் தகர்க்கப்பட்ட பிற்பாடு கோயிலாகண்டியில் வதைமுகாம் அமைக்கப்பட்டது. கோயிலாகண்டி முகாமில் காந்தியின் சித்திவதைக்காளான கைதி ஒருவர் திடீரென மயக்கமுற்று விட்டார். கைதியை அப்படியே விட்டு விட்டு வெளியே சென்று விட்டார் காந்தி. சற்று நேரத்திற்குப் பின் காந்தி முகாம் திரும்பிய போது அந்தக் கைதிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு பண்டேஜால் கட்டுப்போடப்பட்டிருப்பதைப் பார்த்தார். காந்திக்கு ஆத்திரம் மேலெழுந்தது. கோபத்தடன் கத்தியபடி கைதியின் பண்டேஜைக் கத்தியால் கீறிக் குதறிய பிற்பாடு கோடாரிப்பிடியொன்றினால் அந்தக் கைதியை அடித்துக் கொன்றார்.

கோயிலாகண்டி முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர் நிர்மலன். சொகுசான வாழ்க்கையில் அலாதியான பிரியங் கொண்டிருந்த நிர்மலன், சிங்கப்பூர் மற்றம் ஐரோப்பிய நாடுகளில் புலிகளுக்காகப் பண விஷயங்களில் பணிபுரிந்தவர்.

அரசாங்கத் திணைக்களங்களிலும் ரயில் நிலையங்களிலும் இருந்து பெற்றுக் கொண்ட பொருட்களையும் சிறைக்கைதிகளின் உழைப்பையும் பயன்படுத்தி நிர்மலன் தனக்கென ஒரு வசதியான சிறு வீட்டைக் கட்டினார். வேறு இடங்களில் இருந்து களவெடுக்கப்பட்ட பொருட்களையும் மற்றும் பறவைகள், வளர்ப்புப் பிராணிகளையும் கூட்டி வீட்டை மெருகேற்றினார். கண்ணன் என்ற சிற்பக் கலைஞரின் (அவரும் ஒரு கைதிதான்!) உழைப்பையும் நிர்மலன் பெற்றுக் கொண்டார்.

நிர்மலனுக்கும் காந்திக்கும் தகராறு ஏற்படாத வரையில் எல்லாமே சுமுகமாக இருந்தது. உளவுப்பிரிவைச் சேர்ந்த காந்திக்கும் முகாம் பொறுப்பாளரான நிர்மலனுக்கும் தகராறு ஏற்பட்டதும் நிர்மலன் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார். நிர்மலனுடைய பறவைகளுக்கும் ஏனைய செல்லப்பிராணிகளுக்கும் விடுதலை கிடைத்தது.

எஞ்சியிருந்த பன்றி
மயில்களையும் கொ
நாட்களுக்குள் கொ
விட்டார் காந்தி. யா
யாரெல்லாம் நிர்ம
வீட்டைக் கட்டப் ப
களோ அவர்களைச்
வீட்டை உடைப்பித்


1991 மே மாத
புலிகளின் வதைமு
ஒன்றிலிருந்து சிறி
காலில் விலங்குகளு
தப்பியோடிவிட்டா
மக்கள் விடுதலைக்
முன்னாள் உறுப்பி
உடனடியாகவே மு
பொறுப்பாளர்களு
தண்டனை வழங்க
புலனாய்வுத்துறை
பொறுப்பாளர் பொ
சிறியின் இரு சகோ
தகப்பனையும் இன்
நெருங்கிய உறவின
முகாமிற்குப் பிடித்
இவர்கள் வேறுவே
வைத்துச் சித்திரவ
செய்யப்பட்டார்கள்
சிறியின் தகப்பனை
புதல்விகள் சித்திர
செய்யப்பட்ட அ
அழைத்துச் சென்ற
பொட்டம்மான். கு
பெருக்கின் நடுவில்

நினைவுடன் புரண்
தனது இரண்டு மக
பார்க்க ...பந்திக்
சிறியின் தந்தை. பி
முன்னிலையிலே
இருவரையும் மே
பொட்டம்மான் உ

துயரத்தைத்
மல் சிறி ஒளித்திரு
இடங்கள் எனத்தா
இடங்களைச் சொ
அப்பா.

மறுநாளே சி
பிடிக்கப்பட்டார்.
குடும்பத்துக்கு எ
என்று இதுவரை
சிறி தப்பி ஓடியது
வயதான அச்சக
ஒருவரையும் புலி
பிடித்திருந்தனர்.
சகோதர... நிற
உரிமையாளரான
வதை முகாமிற்கு
டார். அங்கு காந்
சித்திரவதை செய்
சித்திரவதையின்
ஊரெழு முகாமிற்
அங்கு மரணமான
ஏனைய கைதிகள்
முதியவரின் உட
சாக்கொன்றுக்குள்
கட்டும்படி பணிக்
ஒரு பிக்-அப் வா
முதியவரின் உட
செல்லப்பட்டது.
மாதங்களின் பின்
குடும்பத்துக்குத்
தெரிவிக்கப்பட்ட

**ஆதாரம் : சர்வதேச**
**அறிக்கைகள்;**
**மனித உரிமைகளுக்**
**பல்கலைக்கழக ஆசி**
**(யாழ்ப்பாணம்) அற**



நன்றி - நூலகத்திட்டம்



# செல்வி எங்கே?

## வியன்னா மனித உரிமைகள் மாநாட்டில் கேள்வி.

இந்த வருடம் ஜூன் மாதம் ஒஸ்ட்ரியாவின் தலைநகரான வியன்னாவில் உலக மனித உரிமைகள் மாநாட்டை ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் பங்கு பற்றியிருந்த இம் மாநாட்டில் ஆயிரத்து முந்நூறு அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்கேற்றிருந்தன.

உலகெங்கும் இடம் பெறும் மனித உரிமைகள் மீறல் பற்றிய தகவல்களும் ஆவணங்களும் அடங்கிய கண்காட்சி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் பிரதிநிதிகளும் இலங்கை மனித உரிமை நிறுவனங்களும் இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்தன. எதிர் காலத்தில் மனித உரிமைகள் சாசனத்தை அமுல்படுத்துவது எவ்வாறு? மற்றும் மனித உரிமைகள் குறித்து அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கும் இருக்கும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பது எவ்வாறு போன்ற அடிப்படையான விஷயங்களையே மாநாடு குவியப்படுத்திற்று.

இலங்கையிலிருந்து கலந்து கொண்ட மனித உரிமை நிறுவனங்கள் அனைத்தும் ஒரே குரலில் மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை என்ற கருத்தை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றின

இதே வேளை சீனா, இந்தியா, இலங்கை, இந்தோனேஷ்யா போன்ற நாடுகள் பொருளாதார மேம்பாடு வரும்வரை மனித உரிமைகளைப் பேணுவது சிரமம் என்றும் ''முதலில் சோறு; பின்னரே சுதந்திரம்'' என்றும் வாதாடின.

எனினும் ஒருமித்த கருத்துடன் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படாமலேயே மாநாடு முடிந்தது. மனித உரிமைகளின் உலகளாவிய இயல்பு குறித்த அங்கீகாரம் பரவலாக இருந்தது என்பதை உணரக் கூடியதாக இருந்தது என ஒஸ்ட்ரிய அரசப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பற்றிய பத்திரிகையாளர் மாநாடொன்றை விடுதலைப் புலிகள் ஒழுங்கு செய்திருந்தனர். விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இந்தப் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

லோரன்ஸ் திலகர் (பாரிஸ்), அன்ரன் பொன்ராஜா (சுவிற்சர்லாந்து) ஆகிய புலிகள் அமைப்பினரும் புலிகளின் நீண்டகால ஆதரவாளரும் அமெரிக்க வழக்கறிஞருமான கரேன் பார்க்கரும் முக்கியமான பேச்சாளர்களாக இருந்தனர். கூடவே தென்னிலங்கை நிலைமை பற்றி இரண்டு இலங்கை சட்டத்தரணிகள் பேசினர். ஒருவர் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராவர்.

வடக்குக் கிழக்கு நிலைமை பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் பேசினார். அண்மையில் வடக்கு சென்று திரும்பிய டென்மார்க்கைச் சேர்ந்த ஒருவரும் பேசினார். எதிர்பார்த்த முடிவு போல விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி எவருமே பேசவில்லை.

கேள்வி நேரத்தின் போது பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஒரு மனித உரிமைவாதி வடக்கிலுள்ள சிறைக் கைதிகள் பற்றியும் குறிப்பாகச் செல்வி பற்றியும் கேட்டபோது ''நேரம் முடிவடைந்து விட்டது'' என்று சொல்லி மாநாட்டை முடித்து வைத்து விட்டார் தலைமை ஏற்றிருந்த கரேன் பார்க்கர் அவர்கள்.

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத அந்த பெல்ஜிய மனித உரிமைவாதி மாநாடு முடிந்த பின்பும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைப் பின் தொடர்ந்து கேள்வி கேட்ட வண்ணம் இருந்தார். லோரன்ஸ் திலகரும் கரேன் பார்க்கரும் திடீரென்று ஓடித் தப்பி விட்ட பிற்பாடு அன்ரன் பொன்ராஜா அவர்களே மாட்டுப் பட்டுக் கொண்டார்.

செல்வி பற்றிய வினாவுக்கு எவ்வித பதிலும் தர முடியாத அவர் எத்தனையோ ஆயிரம் பெண்கள் கொல்லப்பட்டும் காணாமலும் போயிருக்கிற போது ஒரு செல்வி பற்றி மட்டும் அக்கறை என்ன மாதிரி ஒரு பதிலைத் தந்திருக்கிறார்.

மக்களுக்கு உண்மையைச் சொல்லாத, சொல்லத் துணிவற்ற எந்த அரசியலும் உண்மையான விடுதலையைப் பெற்றுத் தராது என்பது வரலாறு தரும் பாடம். வரலாற்றிலிருந்து எதனையுமே கற்றுக் கொள்வதில்லை என்பதே எங்களுடைய வரலாறு எங்களுக்குத் தரும் பாடம் என்பது எவ்வளவு இழுக்கு நிறைந்த துயரம்?



### செல்வி

செல்வி (செல்வநிதி தியாகராஜா) 1960ம் ஆண்டில் பிறந்தவர். இவர் சேமமடுவைச் சேர்ந்தவர். க.பொ.த சாதாரணதரம் வரை வவுனியா மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். பின்னர் சமூகநீதிக்காக உழைக்கும் அவாவில் கல்வியைக் கைவிட்டுவிட்டு காந்தியத்துடன் இணைந்து அகதிகள் புனர்வாழ்வில் ஈடுபட்டார்.

80களின் ஆரம்பத்தில் புளொட் (PLOTE) இயக்கத்தின் மகளிர்ப் பகுதி பொறுப்பாளராகவும் கடமையாற்றினார். பின்னர், இயக்கத்தின் அராஜகப் போக்கினால் அதிலிருந்து விலகிக் கொண்டார். 1986ம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழகத்திற்கு 1988இல் அனுமதி பெற்றார். இக்கால கட்டத்திலேயே அவர் பெண்கள் ஆய்வு வட்டத்தில் சேர்ந்து பெண் அடக்கு முறை தொடர்பான கட்டுரைகள், கலந்துரையாடல்கள், நாடகங்கள் எனபவற்றில் பங்குபற்றினார். அவர் எழுதிய கவிதைகள் சில **சொல்லாத சேதிகள்** எனும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றன. பெண்கள் ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்ட இக் கவிதைத் தொகுப்பு தமிழில் வெளிவந்த முதலாவது பெண்ணிலைவாதக் கவிதைத் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இவரது கவிதைகள் சர்வதேசரீதியில் அறியப்பட்டவை. அமெரிக்க பென் (Pen American Center) அமைப்பு 1992ம் ஆண்டிற்கான சுதந்திர எழுத்திற்கான (Freedom to Write) விருதினை செல்விக்கு வழங்கியுள்ளது. பேச்சுச் சுதந்திரத்தைப் பேணும் நோக்குடன் உழைத்து அதனால் துன்புறுத்தப்படும் எழுத்தாளர்களுக்கே இவ்விருது வருடாந்தம் வழங்கப்படுகிறது. இவ்விருதினை இதுவரையில் பெற்றவர்களில் மிகவும் இளையவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1988ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அங்கு பல்கலைக்கழகப் பெண்கள் அமைப்பினை நிறுவ அரும்பாடுபட்டார். பல்கலைக்கழகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிராகவும் பல தடவை குரல் கொடுத்தார்.

இக்கால கட்டத்திலேயே அவர் பூரணி பெண்கள் அமைப்பிலும் அங்கத்துவம் வகித்து சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு புனர்வாழ்வு அளிக்க உழைத்தார்.

இவர் **அடுப்படி அரட்டை** (இதில் காலஞ்சென்ற ராஜனி திரணகமவுடன் இணைந்து நடித்தார்), **தியாகத் திருமணம்** போன்ற நாடகங்களில் பங்கேற்று நடித்தார். அடுப்படி அரட்டை பாலியல் வன்முறை தொடர்பானது. தியாகத்திருமணம் சீதனப் பிரச்சினை பற்றியது. இவ்வாறு நிகழ்காலப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட நாடகங்களில் பங்கேற்று பலருடைய அபிமானத்தையும் பெற்றவர் செல்வி.

30ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1991ம் ஆண்டு புலிகளினால் செல்வி கடத்திச் செல்லப்பட்டபோது அவர் நாடகமும் அரங்கியலும் பயிலும் 3ம் வருட மாணவராவார். சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகள் செல்வியின் கடத்தல் தொடர்பாக புலிகள் இயக்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளன. இதுவரை அவர் பற்றிய எந்தத் தகவலையும் புலிகள் வெளியிட மறுத்து விட்டனர்.

### நோபேட்

கேசவன், டொமினிக், கோவிந்தன், பிரான்சிஸ் சேவியர் முதலில் பெயர்களாலும் நோபட் அழைக்கப்பட்டார். திருகோணமலையில் பிறந்த நோபேட் விடுதலைப் புலிகளால் கைதாகும் போது ஏறத்தாழ நாற்பது வயதாகியிருந்தார். 1968 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற நோபட் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டு இயங்கினார். பின்னர் ஜனவேகம் அமைப்புடனும் சேர்ந்து செயல்பட்டார். திருகோணமலையில் 'சங்கப்பலகை' என்ற பெயரில் மாதமொருமுறை சமூக, அரசியல் விடயங்களையிட்டுக் கருந்தரங்குகளை நடத்தினார்.

எண்பதாம் ஆண்டுகளில் மலையகத்திலிருந்து வெளிவந்த தீர்த்தக் கரை சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றினார்.

மெதுமையான சுபாவமும் அமைதியான போக்குமுடைய நோபேட் மிகத் தீவிரமான அரசியல், சமூக உத்வேகம் கொண்டவர். அவரது வாழ்க்கை முழுக்கவே முற்போக்கான அரசியல் செயற்பாடுகளால் நிறைந்திருந்தது. எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அலையினால் வளர்க்கப்பட்ட இவர் 1984 ஆம் ஆண்டு புளொட் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராகவும் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டார். எனினும் புளொட்டின் தவறான அரசியல் பாதை, இயக்கத்துள் தலைமையின் எதேச்சாதிகாரப் போக்கு, உட்கட்சிப் படுகொலைகள் ஆகியவற்றால் அதிருப்தியுற்று 1985 இல் அவ்வியக்கத்திலிருந்து வெளியேறினார். வேறு சில அதிருப்தியாளர்களுடன் சேர்ந்து புளொட்டின் ஜனநாயக விரோதப் போக்கை அம்பலப்படுத்துவதற்காக தீப்பொறி எனும் பத்திரிகையை வெளியிட்டார்.

இவரது **புதியதோர் உலகம்** என்னும் நாவல் தேசிய இயக்கக் குழுக்களுள் இடம்பெற்ற அதிகாரப் போட்டிகள், வன்முறைகள், பெண்கள் மீதான வன்முறை ஆகியவை பற்றியெல்லாம் காரசாரமான கண்டனங்களை முன்வைத்தது.



### தில்லை, மனோ

தில்லை என்கிற தில்லைநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப் பட்டதாரி மாணவர். எண்பதுகளில் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற போது புளொட் அமைப்புடன் தன்னை இணைத்துக் கொண்டார். புளொட்டின் உட்கட்சி ஜனநாயக மற்ற நிலை, கோட்பாட்டுத் தவறுகள் காரணமாக அதிலிருந்து பின்னர் விலகினார். 83 இனப் படுகொலைகளின் போது மலையகத்திலிருந்து விரட்டப்பட்டு வந்த மக்களை கிளிநொச்சி, வவுனியாப் பிரதேசங்களில் குடியமர்த்துவதில் முக்கிய பங்காற்றியவர். கல்வியால் பின்தங்கியிருந்த வவுனியாப் பிரதேச மாணவர்களில் அக்கறை கொண்டு இலவச வகுப்பக்களையும், கல்விக் கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து நடாத்தி வந்தவர். தமிழ் பேசும் மக்கள், அவர்களது அரசியல் உரிமைகள், போராட்டங்களின் பால் ஈடுபாடும், அர்ப்பணிப்பும் கொண்டவர். இவரைக் கைது செய்து வைத்திருந்த புலிகள் தற்போது மரண தண்டனை வழங்கி விட்டதாகக் கூறியிருக்கிறார்களாம்.

மனோ, செல்வியைத் தொடர்ந்து கைதானவர். இவரும் யாழ் பல்கலைக் கழக வணிக பீட மாணவர். கைதான காரணம் வழமை போல யாருக்கும் தெரியாது. இப்போதைய நிலை பற்றியும் ஒரு தகவலும் இல்லை.

நன்றி - நூலகத்திட்டம்



## மலையகக் குறிப்புகள்?

மத்திய மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கு தமது உறுப்பினர் உரிமையை சத்தியப் பிரமாணம் செய்து உறுதி செய்து கொள்வது மேலும் தாமதப்படுத் தப்பட்டுள்ளது.

பாணந்துறை மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கடந்த 17ம் திகதி இவர் கண்டியிலுள்ள மத்திய மாகாண சபையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், பாதுகாப்பாக இவரை கொழும்பிலிருந்து கண்டிக்கு கூட்டிச் செல்வதற்கு முடியாதிருக்கின்றது என்ற உளவுத்துறையினரின் பரிந்துரையின் பேரில் அதே நீதிமன்றம் முன்பு வழங்கிய உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.


நீதித்துறை விவகாரங்களில் அரசியல் தலையீடு காரணமாக நீதித்துறைச் சுதந்திரம் பாதிக்கப்படுவதும், இது மக்களின் ஜனநாயக மரபுகளைப் பாதுகாப்பதற்கு ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளமையும் புதிய விடயங்களல்ல.

கொழும்பில் தடுத்து வைக்கப் பட்டிருந்த சந்திரசேகரனின் வழக்கு கண்டியில் நடத்தப்பட்ட போது அவரும் டீ.ஏ.காதர், வீ.ரீ. தர்மலிங்கம் ஆகியோரும் பல தடவைகள் கண்டிக்கு பொலிஸாரினால் அழைத்து வரப்பட்டார்கள். சில தினங்களுக்கு முன்பு கூட அவர் பாணந்துறை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அத்தோடு ஒரு தனி மனிதனை கொழும்பிலிருந்து கண்டிக்குக் கூட்டிச் செல்லுமளவிற்குப் பாதுகாப்பு நிலைமைகள் தென்னிலங்கையில் மோசமாக இல்லை. இது நொண்டிச் சாட்டு. சந்திரசேகரன் அரசியல் ரீதியாக தலை தூக்குவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளில் ஒன்றுதான் இது.

சமகால அரசியலில் சந்திரசேகரனின் அரசியல் செயற்பாடு இ.தொ.காங்கிரஸிற்கு மட்டுமே சவாலாக அமைந்திருக்கின்றது. இ.தொ.காவுக்கு மிகவும் விசுவாசமானவராக இ.தொ.காவின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு உழைத்தவர் சந்திரசேகரன். எனினும் 1983ம் ஆண்டு இனக் கலவரத்தைத் தொடர்ந்து தென்னிலங்கையில், குறிப்பாக மலையக மக்களின் மீது பேரினவாதக் கெடுபிடிகளை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டதும் மலையகப் பகுதிகளில் எவ்வித காரணமும் இல்லாமல் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள், இச் செயல்களுக்கு இ.தொ.காவின் தலைமைகள் ஆதரவு வழங்கியமை சந்திரசேகரனுக்கும் இ.தொ.காவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது. இத்தகைய கருத்து வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய அடிப்படை ஜனநாயக மரபுகளுக்கு இ.தொ.காவில் இடம் இல்லாது போனதால் இது நாளடைவில் முரண்பாடாக வளர்ச்சி அடைந்தது.

எனினும் 1988ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது மத்திய மாகாண சபைக்கான தேர்தலின் போது கூட சந்திரசேகரன் இ.தொ.காவை ஆதரித்து பிரச்சாரங்களில் ஈடுபட்டார். அப்போது அடுத்து நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தலில் இ.தொ.காவின் சார்பாக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் சந்தர்ப்பம் சந்திரசேகரனுக்கு வழங்கப்படும் என்ற ஒரு புரிந்துணர்வை இ.தொ.கா தலைமை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அதன் பின் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இவருக்குப் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இ.தொ.காவின் இந்த முடிவானது மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவோ அல்லது சகித்துக் கொள்ளவோ மறுக்கின்ற ஜனநாயக விரோதப் போக்கின் விளைவுதான் என்பது தவறாகாது.



திரு. பெ. சந்திரசேகரன்

# சந்திரசேகரனும் மாகாண சபைப் பிரதிநிதித்துவமும்

இத் தேர்தலில் இ.தொ.காவின் சார்பாகப் போட்டியிட சந்திரசேகரனுக்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டிருந்தால் அவர் தொடர்ந்தும் இ.தொ.காவிற்கு விசுவாசமானவராக இருந்திருப்பார் என்பதை நம்புவதற்கு இடம் இருந்தது.

எனினும் இ.தொ.காவின் இம்முடிவானது மலையக மக்கள் முன்னணியின் மூலம் சந்திரசேகரன் வேறொரு அரசியல் சக்தியாக மலையகத்தில் உருவாக வழிவகுத்தது. இது இந்நாட்டு மக்களுக்கு இருக்கின்ற அரசியல் பன்முகத் தன்மையின் உரிமையின் (Right of Political Pluralism) அடிப்படையில் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

சந்ததிரசேகரனதும், மலையக மக்கள் முன்னணியினதும் அரசியலானது, அரசியல் தொடர்பாக ஒவ்வொருவரும் கொணடுள்ள அபிப்பிராயங்கள், நிலைப்பாடுகளின் அடிப்படையில் விமர்சனங்களுக்கும், கலந்துரையாடல்களுக்கும் உட்படுத்தப்படக் கூடிய ஒரு விடயமாகும். அவற்றை ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ எவருக்கும் உரிமை இருக்கின்றது. இது மக்களின் அடிப்படை உரிமையாகும். அரசியல் முதிர்ச்சியின்மையின் காரணமாக இவர்கள் கடந்த காலங்களில் பல்வேறு தவறுகளை அரசியல் ரீதியாகப் புரிந்துள்ளார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆனால்,மக்கள் மத்தியில் சந்திரசேகரனுக்கோ அல்லது மலையக மக்கள் முன்னணிக்கோ அரசியல் ரீதியாக செயற்படுவதற்கான உரிமையென்பது விமர்சனங்களுக்கோ, கலந்துரையாடல்களுக்கோ உட்படுத்தப்படக் கூடிய ஒன்றோ அல்லது நிராகரிக்கப்படக் கூடிய ஒன்றோ அல்ல. அது எவ்வித நிபந்தனைகளுக்கும் அப்பால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு அடிப்படை ஜனநாயக உரிமையாகும். இத்தகைய ஜனநாயக உரிமைகளை அரசியல் அடாவடித்தனங்களின் மூலம் நிரந்தரமாக இல்லாதொழித்து விட முடியாது.

மலையக மக்கள் முன்னணியின் இந்த உரிமைக்குப் பெரும் சவாலாகவும், மலையக மக்கள் முன்னணியை இல்லாதொழிப்பதற்கு இந்த அரசின் ஆதரவை பயன்படுத்திப் பல வழிகளிலும் இ.தொ.கா செயற்பட்டு வந்துள்ளது என்பது நாடறிந்த விடயமாகும்.

பேரினவாத அடிப்படையில் செயற்பட்டு வருகின்ற ஒரு அரசுக்கு, சிறுபான்மை மக்கள் மத்தியில் உருவாகின்ற அரசியல் அமைப்புக்களை இல்லாதொழிக்க உதவுவதானது சிறுபான்மை மக்கள் மீது பேரினவாத அடக்குமுறைகளை நிலைநாட்ட ஏற்படுத்திக் கொடுக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகவே இது கருதப்படல் வேண்டும். எனவே சத்தியப் பிரமாணம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமையையும், மேற்கூறிய பின்னணியின் அடிப்படையில் புரிந்து கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டாலும், நீதிமன்றம் அவர் குற்றவாளிஎன்பதை உறுதி செய்து தீர்ப்பு வழங்கும் வரை அவர் நிரபராதியாகவே கருதப்படல் வேண்டுமென்பது எமது நாட்டின் சட்டவியல் கோட்பாடாகும். இதன் அடிப்படையிலேயே தடுப்புக் காவலில் உள்ள சந்திரசேகரனுக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனவே இவர் பெற்றுக் கொண்ட மாகாண சபை உறுப்பினர் உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். இது சந்திரசேகரனதோ அல்லது அவருக்கு வாக்களித்த மக்களினதோ கடமை மட்டுமல்ல. இந்த நாட்டில் வாழுகின்ற ஜனநாயக மரபுகளை நேசிக்கின்ற எல்லோரதும் கடமையாகும். இத்தகைய உரிமைகளை பாதுகாப்பதற்காக வழங்கப்படுகின்ற பங்களிப்புகள் இந் நாட்டின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு வழங்கப்படும் ஆதரவாகக் கொள்ளல் வேண்டும்.

# இலங்கைப் பெண்கள்: ஒரு திரைப்பட விழா

இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம் ஏற்பாடு செய்திருக்கும் வீடியோப் படவிழா ஒன்று செப்ரம்பர் மாதம் பதினொராம் பன்னிரண்டாம் திகதிகளில் கொழும்பு ரஷ்ய நிலையத்தில் நடைபெற உள்ளது.

வருடா வருடம் தென்னாசியக் குறுந்திரைப்படங்களின் விழாவை நடாத்தி வருகிற நிலையம் இம்முறை வீடியோப் படங்களை மட்டுமே திரையிட உள்ளது. 1994இல் பாரிய அளவில் தென்னாசியத் திரைப்படாவிழா ஒன்றை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால் இம்முறை வீடியோப் படங்களுடன் மட்டுமே நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று என்று அமைப்பாளரான ஷாமினி சரிநிகருக்குத் தெரிவித்தார்.

இடம் பெற இருக்கும் அனைத்து வீடியோப்படங்களும் இலங்கைப்படங்களாகும். இலங்கைப் பெண்களின் நிலை, பிரச்சினைகள், வாழ்வியல் போன்ற அம்சங்கள் குறித்த பெண்நிலைவாத நோக்கில் அமைந்த 30 படங்கள் திரையிடப்படவுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் பெண்நிலைவாத நோக்குநெறி திரைப்படங்களிலும் வீடியோப்படங்களிலும் உன்னதமான முறையில் வளர்ந்திருக்கிறது.

இம்முறை விழாவில் திரையிடப்படவுள்ள அனைத்துப்படங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் ஒரு சில தனியாட்களாலும் தயாரிக்கப்பட்டவை.

இந்தப் படங்களில் ஒன்றேனும் இலங்கை அரசின் தொலைக் காட்சியான ரூபவாஹினியில் திரையிடப்படவில்லை. பெரும்பாலான படங்களைத் திரையிட ரூபவாஹினி மறுத்து விட்டது.

இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லைத்தான்.

ஐன்லால், ஷாமினி பொயில், சிறியானி பெரேரா, அனோமா ராஜகருணா, ஷானி ஜயவர்தனா ஆகிய பெண் திரைப்பட நெறியாளர்களது படங்களுடன் தர்மசிறி பண்டாரநாயக்கா, வசந்த ஒபேசேகர ஆகிய புகழ்பெற்ற நெறியாளர்களின் படங்களும் இடம் பெற உள்ளன.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் படங்கள் திரையிடப்படும். பெண்களும் மதமும் என்ற தலைப்பில் இந்து, பௌத்த, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களில் பெண்களின் நிலை, அவர்களுக்குரிய இடம் என்ன என்பது பற்றி விசாரணை எழுப்பும் நான்கு படங்கள் திரையிடப்படும்.

அனோமா ராஜகருணாவின் புகழ்பெற்ற குறுந்திரைப்படமான 'விலங்கு' மற்றும் சந்திரரத்ன மாப்பிட்டிகவின் 'அம்மா' ஆகிய படங்களும் முதல் நாள் சிறப்புப் படங்களாக இடம்பெற உள்ளன.

நெறியாளர்கள், பார்வையாளர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல்களும், ஆய்வரங்குகளும் இரண்டு தினங்களும் இடம் பெறும்.

எல்லாப்படங்களுக்கும் அனுமதி இலவசம் எனினும் பார்வையாளர்கள் முன்கூட்டியே அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம் (ICES) இலக்கம் 8, கின்றி ரெறஸ், கொழும்பு 8, மற்றும் ரஷ்ய நிலையம், சுதந்திர சதுக்கம் ஆகிய இடங்களில் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் 698048 எனும் இலக்கத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.




ஷாமினி பொயிலின் The Possesed படத்திலிருந்து..

சிவா கௌதமன்.

நன்றி - நூலகத்திட்டம்






மூக்கை விரித்து முகர்ந்துதான் பார்த்தான் அவன். கிட்டடியில் மணக்கிறது. அந்நிய மணம். மிகச் சமீபத்தில் எங்கேயோ தான் இருக்கிறார்கள். பயமில்லை. பின்னால் பெரிய மூட்டை. கண்டவுடன் விட்டு விடுவார்கள். ஆயிரக் கணக்கில் மனிதர்களைச் சுட்டுக் கொன்ற நாட்கள் கொஞ்ச நாளைக்கு முன்னர் தான் போயின.

பாஸ்கரன் பாவம். போனமுறை நிறைய நஷ்டப்பட்டு விட்டான். ஒரு மூட்டை காய் மிளகாய் இறுக்கிக் கட்டியதில் அவ்வளவும் அழுகி விட்டது. அதனை உப்புப் போட்டு அவித்துக் காய விட்டிருக்கிறான். இம்முறை பீட்ரூட் கட்டியிருக்கிறான். கிலோ இரண்டு ரூபா. கிளிநொச்சியில் என்ன மாதிரியோ? இதில் தேறினால் தான் உண்டு. இவன் மூட்டையில் வெங்காயம். எப்படியும் 'அரைக்கரை' இலாபம் வரலாம். இனி வாய் வல்லமையைப் பொறுத்தது. சிறியும், அத்தானும், நவத்தானும், விஜயனும் முந்திரிகைப் பழம் கட்டியிருந்தார்கள். அது நிறைய இலாபத்தைத் தரலாம். தொடையையும் சொறிந்து கொண்டு விற்பதில் நவம் வலுவிண்ணன். அவனுடன் ஒட்டிக்கொண்டு சிறியும், அத்தானும், விஜயனும் விற்றுவிடுவார்கள்.

விஜயனுக்கு இதுதான் முதல் தரம். லூசான சேர்ட்டையும் போட்டுக்கொண்டு கொஞ்சம் முந்திரிகைப் பழமும் கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டான். பாவம் தான் அவனும். தமையன் துப்பாக்கிச் சூட்டில் எப்பொழுதோ இறந்து போனவன். (யார் அதனைச் செய்தார்கள் என்பது இன்னமும் தான் தெரியவில்லை) தாய் ''கவனம், கவனம்'' என்று மற்றவர்களுக்கு வெற்றிலை பாக்கும், தண்ணீரும் கொடுத்து அவனையும் அனுப்பி விட்டார். தேனீர் வைத்துத் தர தாயாரால் எப்படி இயலும்? ஒரு உழைப்பும் இல்லாக் குடும்பம் அது. அம்மாளாச்சி தான் அவளுக்குத் துணை. அம்மாளே, விஜயன் நல்ல இலாபம் சம்பாதித்துத் தர வேண்டும்.

''எப்படிக் காசைப் புரட்டினாய்'' கேட்டான் விஜயனிடம்.

''எனக்குத் தெரியாது... அம்மா தான் எங்கேயோ மாறித் தந்தவா'' என்றான் விஜயன். முகம் கறுக்க வில்லை, உதடு துடிக்க வில்லை; ஒரு சோகம் தானும் இல்லை அவனில்.

'' காலமை என்ன சாப்பிட்டு வெளிக்கிட்டனீ ''? என்று அவன் கேட்கவில்லை. ஒருமுறை வாய் உன்னியது. வேண்டாம் என்று விட்டான்.

சிறியின் அத்தானும் இதே நிலைமை தான். போன கிழமை ''ஆமி செக்கிங்''கின் போது மூவாயிரத்தைத் தொலைத்தவர். காணவில்லை. கேட்கப் பயம். ''நாரி முறிய உழைச்ச காசு... பாழ்பட்டுப் போவான்கள் ..'' என்று மனைவி பெருங்குரலெடுத்துத் திட்டினாள். '' சத்தம் போடாதை,'' என்று சத்தம் போட்டார் அவர். ''எங்கை ஆமி திரும்பி வந்திடுமோ'' என்று பயம் அவருக்கு. வந்தால்...? காசு இல்லை; மண்வீட்டுக் கூரைக்கு நெருப்பு வைக்கலாம்.

என்றாலும் அவர் வாய் சிவக்க வெற்றிலை போட்டு தலைப்பாகை கட்டி சிரித்தபடி தான் வந்தார்.

காலை வெயிலில் புறப்பட்டாயிற்று.

மிகச் சமீபத்தில் தான் மணக்கிறது. இப்பாதையால் வந்திருக்க கூடாது. சனநடமாட்டமில்லை. அதற்காகப் பலாலி சுற்றி வருவதென்றால் மேலதிகமாகப் பத்து மைல். வழமை அப்படித்தான். இம்முறைதான் பாதை மாறியது. ஒரு சின்னப் பயம் நெஞ்சைத் தாக்கியது. சடாரென்று எதிர் பார்க்க முன்னர் முதுகைத் துளைக்குமோ குண்டுகள்? இது ஒரு பிரச்சினைக்குரிய ஊர் என்று தான் சொல்லக் கேள்வி. நவம் அப்பவும் சொன்னவன் - பலாலியால் போவமென்று. சரியானதைத் தெரிவு செய்வதில் எப்பவும் நவம் கெட்டிக்காரன். இனி யோசித்துப் பிரயோசனம் இல்லை.

''ஸ்ஸ்...ஸ்ஸ்..'' என்று கேட்டது. எங்கேயென்று திரும்பிப் பார்த்ததில், பற்றைக்குள் படுத்திருந்தார்கள். சரி அவ்வளவுதான். இனி, ''காம்பிற்குக் கொண்டு போய் நாரி முறிக்கப் போகிறாங்கள். முகம் ஒரு கணம் சுண்டியது. சைக்கிளை நிற்பாட்டினான். மறுபக்கம் சரியப் போனது. தாங்கினான். மற்றவர்களும் நிற்பாட்டினார்கள். எல்லோரையும் சுற்றி வளைத்துக் கொண்டது ஆமி.

''எங்க...எங்க...என்ன?'' ஒரு ஆமி திக்கித் திணறிக் கொண்டு கேட்டான்.

பாஸ்கரன், ''நாங்கள் வியாபாரத்துக்குப் போறம் ஜயா'' என்றான்.

''வெயா...வெயா..''? என்றான் ஆமி. ''பிஸ்னஸ்..கிளிநொச்சி''..என்றான் இவன்.

''வட்...வட்..?'' சாக்கைக் குத்திக் கேட்டான்''. ''வெஜிட்டபிள் அன்ட் புரூட்ஸ்...'' என்றான் இவன். ''ஓபின் ...ஓபின்..''

சரி இனி எல்லாவற்றையும் அவிழ்த்துக் கட்டுவதென்றால்...நாளைக்குத்தான் கிளிநொச்சிக்குப் போகலாம்.'' சரி எல்லாத்தையும் அவிழுங்கோ'' என்றான் நவம்.

பார்த்த ஆமி முந்திரிகைப் பழக்குலைகளை எடுத்துக் கொண்டு மூடச் சொன்னான். விஜயனை மாத்திரம் பிடித்துக்கொண்டு ''புலி..புலி '' என்றான். ''இல்லை ஐயா..'' என்றான் விஜயன். அழுது விடுவான் போல இருந்தது. என்றாலும் ஒரு சந்தேகத்துடன் அவனை விட்டு விட்டான். முதுகில் சூடு விழுமோ என்றொரு திகில்.

சிறிதான் பிறகு சொன்னான். ''உன்னை உந்த லூசான சேர்ட் போடாதை என்டன். கேட்காமல் போட்டாய். பார்த்தியோ?''

அவன் அப்படிச் சென்ற போதிலும் எதிரில் வந்தவர்களிடம் ''உங்காலை போகலாமோ?'' என்று விசாரித்தான்.

''நிலாவரையிலை ஆமி கொஞ்சம் கடுமை''.. என்றார் ஒருவர். இன்னொரு தத்து. நவம் எரிந்து பார்த்தான்.

விரைவாகச் சென்ற சைக்கிள்கள் கொஞ்சம் பின்னடித்தன. இவ்வளவிற்கும் எல்லாருடைய சேர்ட்டும் இந்த மாரிப் பொழுதிலும் வியர்வையால் தெப்பமாக நனைந்திருந்தன.

சுற்று முற்றும் சின்னப் புற்களும், பெரிய பற்றைகளும் நிறைந்து ஒரு வெளியைக் காட்டியது. வெறும் சதுப்பு நிலங்களில் நீர் பரந்து காணப்பட்டது. அடியில் கறுப்பு மண்ணும், மேலே தெளிந்த நீரும் சலசலத்தது. மேலே கவிந்த பிரமாண்டமான வானம். பிரமாண்டமான இப்பெருவெளியில் தங்களுக்கென்று ஒவ்வொரு உலகை வைத்திருக்கும் இவர்கள் சிறுசிறு புள்ளிகளாக அசைந்தார்கள்.

அப்பால் பெருந் தோட்ட வெளி. சிறு சிறு குட்டைகளில் மழை நீர். தோட்டங்களில் தோட்டக்காரர் இல்லை. மண் வெட்டி கொண்டு கொத்துவாரற்று காத்திருந்தது அது.

பட்டென்று நவம் வெடித்தான். ''ஏன் உந்தக் கதையை? நான் சொன்னனான் தானே பலாலியாலை போவமென்டு.'நீங்கள் தான் இதாலை போவமென்டியள். இப்ப பார் இரண்டு மணித்தியாலம் போச்சுது. எங்களைச் சில வேளை காம்பிலை கொண்டு போய் வைச்சிருந்தால் என்ன நிலைமையெண்டு யோசிச்சுப் பாருங்கோ...''

''சீ..இவங்கள் வியாபாரிகளிலை இரக்கப்படுவாங்கள்'' என்றான் பாஸ்கரன்.

''உவங்களோ? மயிரில் இரக்கம்... நேரம் போச்சுதல்லே...'' என்று இன்னும் வெடித்தான். இப்போதைக்கு நவத்தின் ஆத்திரம் தீராது. நவத்தின் பெட்டியிலிருந்துதான் முந்திரிகைப்பழமும் அதிகம் போயிருந்தது. இனி இந்தப் பயணம் முழுவதிலும் நவம் புறுபுறுப்பான். நூறு யார் முன்னுக்குத் தான் சைக்கிளைச் செலுத்துவான்.

தோட்டங்களில் டாங்கிகள் புகுந்து யானையைப் போல துவம்சம் செய்த அட்டகாசங்கள் தெரிந்தன.

இம்முறையே முதலாக வந்த படியால் சிதைந்து போயிருந்த வீடுகளையும், கட்டிடங்களையும், துவம்சம் செய்யப்பட்ட தோட்டங்களையும் பார்த்து விஜயன் ஆச்சரியப்பட்டான். எங்கணும் அந்நிய மணம் வியாபித்திருந்தது. வீடுகளிலும், தோட்டங்களிலும், இருந்தெழுந்த கதிரைகளிலும், படுத்த கட்டில்களிலும், நடந்த வீதிகளிலும், ஒழுங்கைகளிலும், நனைந்த நீரிலும், சேறிலும் அதே அந்நிய மணம்.

துரத்தித் துரத்திக் கற்பழிக்கப்பட்ட பெண்களும் உடம்பு முறிய, இடுப்ப நோக அதே மணத்துடன் எழுந்தார்கள். அந்த மணம் தாங்க முடியாதிருந்தது. அதனை அவர்களால் போக்க முடியவில்லை. சிலரிற்கு தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழி தெரிந்திருக்கவில்லை. ஐந்து பிள்ளைகளின் தாயென்றால் என்ன? அவளிலும் அந்த மணம் படர்ந்திருந்தது.

''அம்மா மணக்குதா''? என்று விசும்பலுக்கிடையில் தன் நெஞ்சை ஒருத்தி காட்டினாள். காயப்பட்டிருந்தது அது. அம்மா என்ன சொல்ல முடியும்? பாவம் அவள். ''இல்லை'' என்று நெஞ்சறியப் பொய் சொன்னாள்.

'' காலை மணந்து பார்..'' என்றாள் புருஷனிடம் ஒருத்தி. ''ஓம் மணக்குது'' என்று அவன் உண்மை சொன்னான். அவளால் புருஷனிடம் ஒட்ட முடியாதாகி விட்டது.

அவ்வளவுதான். வீடுகள், கட்டிடங்கள் போல, தோட்டங்கள் போல நிறையக் குடும்பங்கள் சிதைந்து போய்விட்டன.
தூரத்தில் டாங்கிகளும் பச்சை உடுப்புகளும் மங்கலாகத் தெரிந்தன. ''நிக்கிறாங்கள்'' என்றான் நவம். சைக்கிள் கொஞ்சம் பின்னடித்தது. பாஸ்கரன் வெகு முன்னதாக இறங்கி சைக்கிளைக் கொஞ்சம் சரித்தும் விட்டான். விழுந்தது விழட்டும் என்று சாரத்தை அவிழ்த்து இறுக்கிக் கட்டினான்.

''என்ன அது?..'' என்று உறுக்கினான் ஆமி. நல்ல காலம் தமிழனாக இருக்கிறான். அல்லது தமிழ் தெரிந்திருக்க வேண்டும்.

''நாங்கள் வியாபாரிகள். கிளிநொச்சிக்கு மரக்கறிகளும் பழங்களும் கொண்டு போறம்''

''ஓபின்..ஓபின்'' என்றான் ஆமி. நவத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''பலாலியாலை போயிருக்கலாம்...'' என்று முணுமுணுத்தான். எல்லாரும் சைக்கிள் நிறுத்திச் சாக்குக் கட்டுகளை அவிழ்த்தனர்.

''ரைட்...ரைட்...'' என்ற ஆமி முந்திரிகைப் பழக்குலைகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு கட்டச் சொன்னான்.

ஒருவரும் நவத்தின் முகத்தைப் பார்க்காமல் சைக்கிள் மிதித்தார்கள்.
கொஞ்ச தூரத்தில் ஒரு தேனீர்க்கடை குறுக்கிட்டது. வாய்ப்பன், வாழைப்பழம் சாப்பிட்டு, ரீ குடித்து முடிய அத்தான் ,வெற்றிலைச் சரையைத் திறந்தார். இவனும், பாஸ்கரனும், சிறியும், அத்தானும் வாய் சிவக்க வெற்றிலை போட்டார்கள். இனிக் கிளிநொச்சிக்குப் போனால்தான் சாப்பாடு.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



## ஸ்ரீ.ல.சு.க: ஒரு முடிவுற்ற சகாப்தத்தின்

# 'ஞாபகார்த்த மண்டபம்'

அண்மையில் நடைபெற்ற வெலிஓயா ஜானகபுர இராணுவ முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நீண்ட அறிக்கையொன்று வெளியிட்டிருந்தார். அவ்வறிக்கையில் நாட்டைப் போர்க்கால சூழ்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் நாட்டில் நடைபெறுகின்ற களியாட்டங்கள் அனைத்தையும் நிறுத்திப் போரிடும் இராணுவத்தினருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தெரிவுக்குழு வடக்கு-கிழக்கு மாகாணம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு சமஸ்டிமுறை அமுல்படுத்தப்படவேண்டும் என முடிவெடுத்த போது பூரண சமஸ்டி முறைக்கு ஆதரவளிக்க முடியாது. இந்திய மாதிரியிலான சமஸ்டி முறைக்கே ஆதரவளிக்க முடியும் என்றும் கூறியிருந்தார். ஆனாலும் இந்தியா மாதிரியில் உள்ளது போல பாதுகாப்பு, குடியேற்றம் சம்பந்தமான விடயங்கள் சமஷ்டி அரசுக்கு கொடுக்கப்படாது அவை மத்திய அரசின் கைகளிலேயே இருத்தல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறிமாவின் இத்தகைய கருத்துக்கள் தமிழ் மக்களுக்குப் புதியன அல்ல. காலங்காலமாக சிங்கள இனவாதத்தை வளர்த்து வரும் பெருமை சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் உண்டு என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகெங்கும் வாழும் முற்போக்கு சக்திகளுக்கும் தெரியும். சிங்கள மக்களிடையே வளர்ந்து வந்த தேசியவாதத்தை பௌத்த சிங்களப் பேரினவாதமாக மாற்றிய பெருமை இவர்களுக்கே உண்டு. இது இலங்கையின் அரசியல் வரலாற்றினூடாக யாவரும் அறிந்த விடயம்.

### பண்டாரநாயக்காவின் அரசியல் பிரவேசம்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆரம்பத்தில் சிங்களத் தேசியவாதியாக இருந்தாரே தவிர பேரினவாதியாக இருக்கவில்லை. ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டதாரியாகி இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்தது தொடக்கம் சிங்களத் தேசியவாதத்தை உயர்த்திப் பிடிக்கும் வகையில் பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். ஒரு வார்த்தை கூட சிங்களம் பேசத் தெரியாமல் இங்கிலாந்திலிருந்து வந்த அவர் பிற்காலத்தில் சிறந்த சிங்களப் பேச்சாளராக மாறினார். சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமடைய வேண்டுமாயின் பௌத்தராக இருக்க வேண்டும் என்பது தெரிந்ததினால் கிறிஸ்தவரான அவர் (டொனமூர் இலங்கைக்கு வந்த சமயம்) பௌத்தராகவும் மதம் மாறினார். இதனால் டொனமூர் பௌத்தர் எனவும் அழைக்கப் பட்டார். கண்டிய மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வேண்டும் என்பதற்காக கண்டிய பிரதானிகள் பரம்பரையில் ரத்வத்தை குடும்பத்தை சேர்ந்த சிறிமாவை திருமணம் செய்தார். சாதாரண சிங்கள மக்களையும் கவரத்தக்க வகையில் தனது ஆங்கில உடையைக் களைத் தெறிந்து தேசிய உடைகளை அணியலானார். சிங்களத் தேசியத்தை தூக்கிப்பிடிக்கும் வகையில் 1934ம் ஆண்டு சிங்கள மகாசபையை உருவாக்கினார்.

சிங்கள மகாசபையினூடாக பண்டாரநாயக்கா ''பஞ்ச மகா பல வேகய'' என்பதை அடிப்படையாகக் கொண்டு தனது 'வேலையை' ஆரம்பித்தார். இதன் அர்த்தம் ஐந்து சக்திகள் என்பதாகும். சிங்கள மக்கள் மத்தியில் உண்மையான சக்திகளாக ஐந்து அணியினரை அவர் இனங்கண்டார். ஆசிரியர், மாணவர், நாட்டு வைத்தியர், விவசாயிகள், மதகுருமார் என்போரே அவ்வைந்து சக்திகளுமாவார். இவர்களை அணிதிரட்டும் வகையில் கோசங்களை வைப்பதிலேயே அவர் கூடுதல் கவனம் செலுத்தினார்.

### பண்டாரநாயக்காவின் சமஷ்டி முறை

இவ்வாறு சிங்கள தேசியவாதத்தை தூக்கிப்பிடிக்கும் பணியில் ஈடுபட்ட போதும் ஆரம்பத்தில் இவர் ஒருபோதும் ஏனைய தேசிய இனங்களிற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் சிறுபான்மையாக இருந்த தேசிய இனங்களின் தலைவர்கள் முன்வைக்காத அவர்களின் நலன்பேணும் திட்டங்களைக் கூட இவர் முன் வைத்திருந்தார். அவற்றில் ஒன்றே இலங்கைக்கு சமஸ்டி முறை அரசாங்கத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற கருத்தாகும். இலங்கை கண்டி, கரையோரம், வடக்கு-கிழக்குத் தமிழ்பகுதி என மூன்று சமஸ்டி அரசுகளாக பிரிக்கப்பட்டு' அவை மூன்றையும் இணைத்த மத்திய அரசு ஒன்றை உருவாக்கவேண்டும் என்பதே இவரது சமஸ்டி அரசு பற்றிய திட்டமாகும். இவ் அரசாங்க முறையே இலங்கையில் நீண்டகாலத்தில் ஏற்படப்போகும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என இவர் கூறினார். இவருக்கு முன்னரே சமஸ்டி பற்றிய கருத்தினை 1924 இல் உருவாக்கப்பட்ட கண்டிய தேசிய சபை முன்வைத்த போதும் அதனை அரசியல் பிரச்சாரமாக முன்னெடுத்துச் சென்றவர் இவரேயாவார். 1927 இல் டொனமூர் குழுவினர் இலங்கைக்கென புதிய அரசியல் திட்டத்தை சிபார்சு செய்வதற்காக வந்த போது அவர்க்ள் முன்னிலையில் சமஸ்டிக் கோரிக்கையையே முன்வைத்தார். தமிழ்மக்கள் மத்தியில் கூட இதற்காகப் பிரச்சாரம் செய்தார். யாழ்ப்பாணத்தில் கூட சமஸ்டிக் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பிரச்சாரங்களை நடாத்தினார்.


### தமிழ்த் தலைமைகளின் நிராகரிப்பு

சமஸ்டிக் கோரிக்கைகளுக்காக பண்டாரநாயக்கா இவ்வாறு முயன்ற போது அப்போது தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தி வந்த தமிழ் அரசியல் தலைவர்கள் எவரும் இதனை ஆதரவுடன் நோக்கவில்லை. பண்டாரநாயக்காவையும் அவரது கொள்கைகளையும் எள்ளிநகையாடி, புறக்கணித்தனர்.இத னால் இவரது ஆரம்பகால சமஸ்டிமுறைக் கோரிக்கை வெற்றிபெறவில்லை.

அன்று தமிழ் அரசியல் தலைவர்கள் இதனை ஆதரித்திருந்தால் கண்டிய மக்களிடமிருந்தும், தமிழ்மக்களிடமிருந்தும் வரும் அமுக்கத்தினால் டொனமூர் குழுவினர் சமஸ்டி அரசாங்கத்தை சிபார்சு செய்ய முன்வந்திருக்கக்கூடும். பிற்காலத்தில் வளர்ந்திருந்த இனமுரண்பாடுகளும், அழிவுகளும் கூட வராமல் தடுக்கப்பட்டிருக்கக் கூடும். தூரநோக்கற்ற சுயநலமிகளான தமிழ்த் தலைமைகளினால் தமிழ் மக்கள் இவற்றையெல்லாம் இழக்க வேண்டி ஏற்பட்டது.

பிற்காலத்தில் 1949ம் ஆண்டு தோற்றம் பெற்ற தமிழரசுக்கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்த போது பண்டாரநாயக்காவும் கண்டிய மக்களும் சமஸ்டிக் கோரிக்கையை கைவிட்டிருந்தனர். இதனால் பின்னர் தமிழரசுக் கட்சியின் சமஸ்டிக் கோரிக்கைக்கு ஆதரவளிப்பதற்கு எவரும் இருக்கவில்லை. உண்மையில் இலங்கை சுதந்திரமடைந்ததின் பின்னரான இவ் ஆரம்ப கால கட்டம் சிங்களத் தேசியவாதம் சிங்களப் பேரினவாதத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும் காலகட்டமாக இருந்தது.

> ஸ்ரீ.ல.சு.கட்சியின் முதலாவது தேர்தல் விஞ்ஞாபனம் ''இந் நாட்டு மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அந்நியராகக் கருதப்படும் நிலை மாற்றப்பட வேண்டுமாயின் சிங்களமும் தமிழும் உடன் அரசகரும மொழிகளாக்கப்படுவது மிக அவசியமாகும்'' எனக் கூறியிருந்தது.





### ஐ.தே.கவின் பேரினவாதம்

இப் பேரினவாதத்திற்கு வித்திட்டது ஐ.தே.கட்சியும் அதன் தலைவரான டி.எஸ். சேனநாயக்காவுமே ஆவர்.

சுதந்திரத்திற்கு முன்பே டி.எஸ்.சேனநாயக்கா பேரினவாதத்தை வளர்க்கும் வகையில் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கினார். டொனமூர் அரசியல் திட்ட காலத்தில் இவர் விவசாய அமைச்சராக இருந்த போது உருவாக்கப்பட்ட பிரபல்யமான குடியேற்றத் திட்டமே கல்லோயா அபிவிருத்தித் திட்டமாகும். இங்கு உருவாக்கப்பட்ட 44 குடியேற்றக் கிராமங்களில் 38 கிராமங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றினார். இதற்காக தமிழ்மக்களின் பாரம்பரியப் பிரதேசமாக இருந்த பட்டிப்பளை அம்பாறையென மாற்றப்பட்டது.(தற்போது இது திகாமடுல் ல என மாற்றப்பட்டுள்ளது.) சுதந்திரத்தைத் தொடர்ந்து திருக்கோணமலையில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குடியேற்றத்திற்குப் புறம்பாக பேரினவாதத்தை மேலும் வளர்க்கும் வகையில் பிரஜாவுரிமைச் சட்டமும், வாக்குரிமைச் சட்டமும் கொண்டு வரப்பட்டது; இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் ஐ.தே.கட்சியினால் பறிக்கப்பட்டன.

### ஸ்ரீ.ல.சு.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் 1952

பண்டாரநாயக்கா, ஆரம்பத்தில் ஏனைய தேசிய இனங்களினது நலன்களில் அக்கறை கொண்டிருந்ததற்கு இன்னோர் அத்தாட்சி சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக்க வேண்டுமென்ற அவரது கோரிக்கையர்கும். ஐ.தே.கட்சிக்குள் இவர் இருந்த போதும் மொழி தொடர்பாக இதே கொள்கையையே முன்வைத்திருந்தார். 1951இல் ஐ.தே. கட்சியை விட்டு ஸ்ரீ.ல.சு.கட்சியை உருவாக்கிய போதும் மொழிக் கொள்கையாக இதனையே கொண்டிருந்தார். இதனாலேயே ஸ்ரீ.ல.சு. கட்சியின் முதலாவது தேர்தல் விஞ்ஞாபனம் ''இந் நாட்டு மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அந்நியராகக் கருதப்படும் நிலை மாற்றப்பட வேண்டுமாயின் சிங்களமும் தமிழும் உடன் அரச கரும மொழிகளாக்கப்படுவது மிக அவசியமாகும்'' எனக் கூறியிருந்தது.

ஆனால் 1955இல் சிங்கள பௌத்த பேரினவாதியாக இவர் மாறிய பின் அதுவரை கடைப்பிடித்த மொழிக் கொள்கையைக் கைவிட்டதோடு ஏனைய தேசிய இனங்களின் நலன் பேணும் எல்லாக் கொள்கைகளையும் கைவிட்டிருந்தார்.

1956இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தனிச் சிங்களச் சட்டக் கோஷத்தை முன்னெடுத்தார். இதனூடாக இலங்கை பல்லின மக்களைக் கொண்ட நாடு என்ற கருத்தினை மாற்றி இலங்கை சிங்கள மக்களின் தேசம் என்ற கருத்தினைச் சிங்கள மக்கள் மத்தியில் வளரச் செய்தார். 1956 தேர்தலில் வெற்றி பெற்ற பின் பேரினவாதக் கோஷத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் தனிச் சிங்களச் சட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றினார். 1956 தேர்தலின் வெற்றிக்குப் பௌத்த பிக்குகளை் பிரதான காரணர்களாக இருந்தமையினால் அவர்களும் பண்டாரநாயக்காவும் சேர்ந்து சிங்கள தேசியவாதத்தைச் சிங்கள பௌத்த பேரினவாதமாக மாற்றினர்.

1957இல் தமிழ் மக்களிடமிருந்து எழுந்து வந்த எதிர்ப்பலையினால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை உருவாக்க பண்டாரநாயக்கா முன் வந்த போதும் தானே உருவாக்கிய பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் அதனைக் கிழித்தெறிந்தார். ஈற்றில் தான் வளர்த்து விட்ட பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநிதியாலேயே 1959இல் சுட்டுக் கொல்லவும் பட்டார்.

### பேரினவாதத்திற்கு அரசியலமைப்பு அங்கீகாரம்

பண்டாரநாயக்காவின் மறைவின் பின் அவரினால் உருவாக்கப்பட்ட பௌத்த சிங்களப் பேரினவாதத்தினை வளர்த்து அதற்கு அரசியல் அமைப்பு அந்தஸ்துக் கொடுத்த பெருமை பண்டாரநாயக்காவின் பாரியாரான சிறிமா அம்மையாரையே சாரும்.

1960இல் , தான் பதவிக்கு வந்த காலம் தொடக்கம், சிங்கள 'ஸ்ரீ'. எழுத்தை உருவாக்கல், தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்துதல், அரச உத்தியோகத்தில் பாரபட்சம் காட்டுதல், கல்வியில் பாரபட்சம் காட்டுதல், தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் பாரபட்சம் காட்டுதல் என்பவற்றினூடாக பௌத்த சிங்களப் பேரினவாதத்தை வளர்த்து 1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் திட்டத்தின் மூலம் இப் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்துக் கொடுத்தார்.

1972ம் ஆண்டு அரசியல் திட்டத்தின் மூலம் அதுவரை பாராளுமன்றச் சட்டமாக இருந்த சிங்களம் அரக கரும மொழி என்பதற்கு அரசியல் அமைப்புச் சட்ட அந்தஸ்துக் கொடுக்கப்பட்டது. தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் அதன் உபயோகம் **1958ம் ஆண்டின் 28ம் இலக்கத் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கு இணங்க இருக்கும் எனக் கூறப்பட்டது ஆனால் தமிழ் மொழி தொடர்பான இவ் ஏற்பாடு எந்த வகையிலும் அரசியல் அமைப்பின் ஒரு ஏற்பாடாகப் பொருள் கொள்ளக் கூடாது** எனவும் கூறப்பட்டது. ஆக தமிழ் மொழியின் உபயோகத்திற்கு அரசியல் அமைப்பு அந்தஸ்துக் கொடுக்கக் கூட சிறிமாவும் சுதந்திரக் கட்சியினரும் தயாரில்லை என்பதனையே இது காட்டியது. அத்தோடு பௌத்த மதம் அரச மதம் எனவும் அதனைப் பேணிப் பாதுகாப்பது அரசின் கடமை எனவும் அரசியல் சட்டம் அறிவித்தது.

இதை விட சோல்பரி அரசியல் யாப்பில் பெயரளவில் சிறுபான்மையோர் காப்பீடாகக் கருதப்பட்ட அரசியல் அமைப்பின் 29வது பிரிவு நியமன உறுப்பினர்கள், செனட் சபை என்பனவும் நீக்கப்பட்டன.

உண்மையில் நுணுக்கமாக ஆராய்வோமாயின், தமிழ் மக்களின் நம்பிக்கையில் அறையப்பட்ட கடைசி ஆணியே 1972 அரசியல் திட்டம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அரசியல் அமைப்புத் திருத்தமாக குறைந்த பட்சக் கோரிக்கையாகத் தமிழ் அரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட **ஆறு அம்சக் கோரிக்கையும்** நிராகரிக்கப்பட்டது. இவ் அரசியல் அமைப்பின் பின்னரே இலங்கை என்ற ஐக்கியப் பட்ட நாட்டினுள் தாம் வாழ முடியாது என்பதைத் தமிழ் மக்தள் உணர்வு பூர்வமாகவே புரிந்து கொண்டனர். தமிழ் மக்களின் இளம் தலைமுறை தன் வாழ்வைத் தியாகம் செய்து தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து ஆயுதப் போராட்டத்தையும் ஆரம்பித்தது.

### ஸ்ரீ.ல.சு.க வின் இரண்டக நிலை

எனவே நாட்டைப் போர்க்காலச் சூழ்நிலையில் வைத்து, தமிழ் மக்களை அழித்தொழிக்கும் போருக்கு ஆதரவு கொடுக் வேண்டும் என்ற சிறிமா அம்மையாரின் கருத்து ஆச்சரியப்படக் கூடிய ஒன்றல்ல. அவரிடம் காணப்படுகின்ற பேரினவாதச் சிந்தனையின் தொடர்ச்சியே அது.

பரந்தாமன்


உண்மையில் சிங்கள பேரினவாதத்தின் தொடக்கப் புள்ளியாக டி.எஸ்உம் ஐ.தே.கட்சியும் இருந்த போதும்; பேரினவாதத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றதும், அதை ஒரு பலமிக்க அரசியற்சக்தியாக மாற்றியதும் ஸ்ரீ.ல.சு.கவே. இனவாத முழக்கத்தின் கீழ் 'தேசியக் கட்டுமானம்' என்ற இலட்சியத்துள் இணைக்கப்பட்ட பரந்துபட்ட சிங்கள மக்களின் '' தேசியத்'' தலைமையை, ஸ்ரீ.ல.சு.கவினால்

▶11

நன்றி - நூலகத்திட்டம்



வாசகர் சொ(ற்)ல்லடி



## மெல்லத் தமிழினி புரியவில்லையோ?

மெல்லத் தமிழினி பகுதியில் குமார் பொன்னம்பலம் பற்றிக் குறிப்பிட்ட வரிகள் தொடர்பாகச் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் ''தமிழீழ'' ஆணையைப் பெறப்போவதாகக் கூறிக் கொண்டு, ஆனால் (இலங்கைத்) தமிழ் காங்கிரசாக இருந்த அவரது பரம்பரைக் கட்சியை அகில இலங்கைத் தமிழ் காங்கிரசாகப் பெயர் மாற்றம் செய்தவர் குமார் பொன்னம்பலம். கடந்த காலங்களில் அகில இலங்கை ரீதியாகவும், வடகிழக்கிலும் நடத்தப்பட்ட அநேகமான தேர்தல்களில் போட்டியிட்ட கட்சியே இவரது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகும். இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசியலமைப்பையும், பிரிவினைக்கெதிரான 6 வது திருத்தச் சட்டத்தையும் ஏற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தவர். தமிழ்த் தீவிரவாத இயக்க உறுப்பினர்களதும், சந்தேக நபர்களதும் விடுதலைக்காக ''நீதி''ப் பணியாற்றுவதாகப் பறைசாற்றுவதன் மூலம் அவரது இறுதி இலக்கான இந்த அரசியலமைப்பின் மூலம் தமிழ்த் தேசிய இனத்திற்கு வழங்கப்பட்டுள்ள எலும்புத் துண்டுகளைக் காவ அங்கீகாரம் கோரியவர். இவர் திடீரென இம்முறை மட்டும் சற்று மாறுதலாக வடகிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள் 1993 மே மகாணசபைத் தேர்தல்களில் அரசாங்க ஆளும் கட்சியையும், பிரதான எதிர்கட்சிகளையும், ஏனைய கட்சிகளையும் நிராகரித்து ''எதிர்ப்பு வாக்கு'' ப்போடும் படியும் அதனைக் காலையிலேயே தத்தமது வாக்குச் சாவடிகளுக்குச் சென்று பதிந்து விடும்படியும் பத்திரிகை அறிக்கைகள் மூலம் மட்டும் அழைப்பு விடுத்திருந்தார். இவரது இந்த ''எதிர்ப்பு வாக்கு'' க் கோரிக்கை தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் சிங்களத் தேசிய இனத்தடன் இணைத்து வாழமுடியாது என்ற நிலமைக்குத் தள்ளப்பட்டதனால், பாராளுமன்ற அமைப்புத் தேர்தல் முறைகள் மூலம் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது என்ற வெட்டொன்று துண்டொன்று என்ற ஏற்கனவே தமிழ்த் தேசிய இனம் வந்தடைந்த முடிவிலிருந்து வந்ததொன்றல்லவாகும். இந்தக் குறிப்பிட்ட தேர்தலை மட்டும் பகிஷ்கரி! ஆனால் தேர்தல் முறை பிழையானதல்ல சரியானதே என்பதே அவரது வாதமாகும்.

மேலும் எதிர்ப்பு வாக்குப்பற்றிய அவரது கணிப்பீட்டில் ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க., ஜ.ஐ.தே.மு, இ.தொ.க , பற்றியும் ந.ச.ச.க தொடர்பாகவும் ஏன் இக் கட்சிகளை நிராகரிக்க வேண்டுமெனவும் காரணங்காட்டி வீரகேசரி 13.05.1993 பத்திரிகையில் அறிக்கையொன்று வெளியிட்டிருந்தார். இவற்றில் ந.ச.ச.க பற்றிய கருத்து அல்லது ந.ச.ச.க யை நிராகரிப்பதற்கென இவர் கூறியுள்ள காரணம் குமார் பொன்னம்பலம் அல்லது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் யார்? அல்லது எவரது நலன்களிற்காக அவரும் அவரது கட்சியும் செயற்படுகின்றது என்பதனை தெரியப்படுத்துகின்றது. அவரது கூற்றுப்படி ந.ச.ச.க இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு மாறான ஒரு கட்சி, எனவே மாகாணசபைகளையும் எதிர்க்கின்ற கட்சி, தமிழ் மக்களிற்குக் கொடுக்கப்பட்டதை எதிர்க்கும் எந்த ஒரு கட்சிக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியாது என்பதாகும்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான ஒரு அடிமைச் சாசனம் என்பதை இவர் இன்றுவரை ஏற்றுக் கொள்ளாத ''பசுத்தோல் போர்த்த புலி'' இவர். தமிழ்த் தேசிய இனத்தின் பிரிந்து போகும் உரிமை தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிராத இவர் ந.ச.ச.க இந்திய - இலங்கை மேலாதிக்க ஒப்பந்தத்தை எதிர்த்ததை தவறு என்கிறார். (ஆனால் இவர் கூறும் அளவிற்கு இந்திய எதிர்ப்பாளனாக ந.ச.ச.க இருந்ததா என்பது சந்தேகத்திற்குரியது/கேள்விக்குரியது) அதனால் இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்தால் அவர்கள் தமிழ் மக்களுக்கும், தமிழ்த்தேசிய இனத்திற்கும் எதிரிகள் என்ற ''புதிய தத்துவம்'' புகட்டுகிறார் குமார் பொன்னம்பலம். இதன் ஊடாக இந்திய மேலாதிக்கத்தை இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக ஆதரிக்கும் தீவிர ஆதரவாளனாகத் தன்னை வெளிக்காட்டிக் கொண்டுள்ளார். இந்த அடிமைச் சாசனத்தை உளப்பூர்வமாக ஆனால் வெளிப்படையாக அல்லாமல் ஏற்றுக் கொண்டு ''தமிழ்த் தேசிய இனத்தின் நலனும் இந்திய நலன்களும் ஒன்றே'' எனப் பறைசாற்றிய இந்தியக் கைக்கூலிகளது பிற்போக்கு அரசியல் பங்காளி இவர் என்பது தெளிவாகின்றது.

இவர் ஆளும் வர்க்கங்களின் காவலனாகவே அன்று தொட்டு இன்று வரை செயற்பட்டு வருகின்றார். இவரைப்போய் குமார் பொன்னம்பலம் மட்டும் தான் தமிழ் பேசும் மக்களின் நலன்களில் ''ஓரளவாவது'' அக்கறைப்படுத்துவதாகவும், கதைப்பதாகவும், எதிர்வாக்குப் போடும் படியும் கேட்பதாகவும் ''மெல்லத் தமிழினி'' கூறியிருந்தது வுருந்தத்தக்கது. ''ஓரளவாவது'' என்ற அளவு கோலின் பின்னணியின் பின்னாலுள்ள ஆளும் வர்க்க நலன் என்னவென மெல்லத் தமிழினிக்கும் புரியாமை கவலைக்குரியதே!.

தி.இராஜேந்திரன், வட்டு கிழக்கு, சித்தன்கேணி.

## ஸ்ரீ.ல.சு.க.....

ஊட்டி வளர்க்கப்பட்டு வந்த புதிய தரகு முதலாளிய ஆளும் வர்க்கம் கைப்பற்றிக் கொண்டதும், அதற்கேற்ற தலைமையாகத் தன்னை 1977இல் மறுசீரமைத்துக் கொண்ட ஐ.தே.கவை ஆட்சியில் அமர்த்தியது. இன்று அரசியல் தலைமையை அவர்களிடமிருந்து கைப்பற்ற வேண்டுமானால் ஸ்ரீ.ல.சு. கட்சி ஐ.தே.கட்சியை விடத் தானே சிறந்த தலைமை என்று ஆளும் வர்க்கத்திற்கு மெய்ப்பித்தாக வேண்டும்.

இதைச் செய்ய பண்டாரநாயக்காவால் வித்திடப்பட்டு இன்று வரை வளர்ந்து நிற்கும் 'பஞ்ச மகா பல வேகய' வின் ஆதரவுப் பலத்தை விட்டு அதற்கேற்ற தமது போலிச் சோசலிசக் கோட்பாடுகளைத் துறந்து, ஸ்ரீ.ல.சு.கவை ஆளும் வர்க்கத்திற்கேற்ற கட்சியாகத் தன்னை உருமாற்றிக் கொள்ள வேண்டும். இது சாரத்தில் ஸ்ரீ.ல.சு. கட்சியின் அடித் தளத்தையே மாற்றுகிற ஒரு புது ஐ.தே.கட்சியாக மாறுகிற செய்கையாகும்.

இதைத்தான் அனுரா செய்யத் துடிக்கிறார்.
அதற்கான தற்துணிவு சிறிமாவோ அணியிடம் இல்லை. இருதலைக் கொள்ளியாக அவர்கள் தவிக்கின்றனர். ஸ்ரீ.ல.சு.கவின் அடிப்படைகளை அப்படியே பேணியபடி, ஐ.தே.கவை வீழ்த்தத் தேசிய வாதம், இனவெறி, ஜனநாயகம் என்று கதறுகிறது இந்த அணி. அதன் ஒரு வெளிப்பாடுதான் அம்மையாரின் மேற்படி அறிக்கை.

ஆனால் பாவம் சிறிமா. ஆளும் வர்க்கம் ஐ.தே.கவுக்கு மாற்றாக ஒரு ஜ.ஐ.தே.முவைத்தான் விரும்புமே ஒழிய ஸ்ரீ.ல.சு.கவை அணுகப் போவதில்லை என்பது அவருக்குப் புரியவில்லை.

அவரையும் அவரது கட்சியையும் தொடர்ந்து எதிர்க் கட்சியில் வைத்திருக்க மட்டுமே அவரது இந்த அறிக்கைகள் உதவ முடியும். அவருக்கு இன்னொன்றும் புரியவில்லை. அதுதான் அவரது இந்த ஒவ்வொரு பேச்சும், ஆளும் வர்க்கம் சற்றும் விரும்பாத நாடு பிளவுபடுவதற்கான நிலைமையை மேலும் மேலும் வலுவாக்கிக் கொண்டு வருகின்றன என்பதே.

## மூன்று வருட.

## புலிகளின் சிவில் நிர்வாகம்

இந்த வகையான யுத்தத்திற்குள்ளும் புலிகள் தமது சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முடிக்கிவிட்டுள்ளனர். அவர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ள காவல்துறையினர் சாதாரண குற்றங்களில் இருந்து கிறிமினல் குற்றங்கள் இழைப்பவர் வரை எல்லோரையும் விசாரணை செய்து தண்டனை வழங்குகின்றனர். அண்மையில் தமிழீழ சட்டக்கல்லூரியில் இருந்து புலிகளால் பயிற்றுவிக்கப்பட்ட சட்டவல்லுனர்கள் பயிற்சியை முடித்து வெளியேறி உள்ளனர். இவர்களின் மூலமாக நீதிமன்றங்களும் ஆரம்பிக்கப்பட உள்ளன. அதற்கு முன்னோடியாக சட்டக் கோவை ஒன்றும் இவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.
வரி அறவிடுதலுக்கென ஒரு தனியான நிர்வாகமே செயற்படுகிறது. இந்த நிர்வாகம் எப்படி எப்படியெல்லாம் மக்களிடம் இருந்து வரியை சுரண்ட முடியுமோ அவ்வளவிற்கு வரியைச் சுரண்டி எடுக்கின்றது. சாதாரணமாக இவர்களது அலுவலகத்தில் துவிச்சக்கர வண்டியை நிறுத்துவதற்கான வரியில் இருந்து பாஸ் வரிவரை அறவிடப்படுகின்றது.
தம்முடன் ஒத்துப் போகின்றவர்ளையே விட்டு வைக்கும் இவர்களின் செங்கோல் ஆட்சியில் உண்பதற்கு மட்டுமே வாய் திறக்க முடியும். அவர்கள் துதிபாடுவதற்கு மட்டுமே பேனாவைப் பிடிக்க முடியும். தட்டுத் தடுமாறி வேறு எதற்காவது வாய் திறந்தால் அல்லது பேனாவைப் பிடித்தால் அவர்களுக்கு நிலக்கீழ்க் குகைகளே தஞ்சமாகிவிடும்.
ஒருபுறம் அரசாங்கத்தின் கெடுபிடிகள். மறுபுறம் புலிகளின் ஜனநாயக விரோதச் செயல்கள். இரண்டுக்கும் நடுவே மக்கள். இதுவே இன்றைய யாழ்ப்பாணம்.

## ரணிலுக்குப் பட்டம் இல்லையோ?

இந்த வருடமும் தமிழ் சாகித்திய விழாவை வெகு விமரிசையாக நடாத்தி முடித்திருக்கிறது இந்து கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சு,

மூன்று நாட்கள் விழாக்கள் நடைபெற்றன.

இறுதி நாளன்று பிரதமர் ரணிலின் கையால் பரிசு வழங்கும் வைபவமும் ''இனிதே'' நிறைவெய்தியது.

'மெல்லத் தமிழினிச் சாகும்' என்றான் பாரதி.
பாரதியின் தீர்க்க தரிசனம் இந்தச் சாகித்திய விழாக்களைப் பற்றித் தானோ என்னவோ எனச் சந்தேகிக்க வைக்கிறது.

சாகித்திய விழாக்கள் எனப் பன்மையில் நான் குறிப்பிட்டது தமிழ் நாட்டின் சாகித்திய விழாவையும் சேர்த்துத் தான்.

தமிழ் நாட்டின் சாகித்திய அக்கடமி பரிசு வழங்க ஆரம்பித்த காலத்திலிருந்து படைப்புத்திறன் கொண்ட படைப்புகளையோ/படைப்பாளிகளையோ பரிசுக்குத் தேர்ந்தெடுத்ததில்லை. எப்போதாவது ஒருமுறை யாராவது ஒரு படைப்பாளிக்குப் பரிசு கிடைத்திருந்தால் அது 'நெல்லுக்குமாங்கே பொசிந்தாற்' போலத் தான்.

தமிழில் நல்ல படைப்புக்கள் எவ்வளவோ இருக்க கோவி.மணிசேகரனின் 'குற்றாலக் குறிஞ்சி' என்கிற நூலைப் பரிசுக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறது தமிழ் நாட்டின் சாகித்திய அக்கடமி.

இது தொடர்பாக 'ஏட்டளவில் நியதிகள் பல இருந்த போதும் கூட நடைமுறையில் அரசியலதிகாரம் சார்ந்த சிபாரிசுகளும், குறுக்கு வழிகளும் தான் தமிழில் பரிசுக்கானவரைத் தெரிவதில் ஆட்சி செலுத்துகின்றன' என்கிறார் சுந்தரராமசாமி.

'எழுத்தை வணிகமாக நிகழ்த்துகிற உலகைச் சேர்ந்த கோவியுடன் பரிசைப் பகிர்ந்து கொள்வது அவருடைய மதிப்பீடுகளை ஏற்பதற்குநிகரானது' என்று கூறி லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசினை ஏற்காது நிராகரித்திருக்கிறார் ஜெயமோகன். இன்குலாப்பும் இதே காரணத்திற்காக தமக்கான பரிசினை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் பரிசுகள் எல்லாம் அரசியல் அந்தஸ்து, சமூக கௌரவம், அதிகாரம், புகழ், பட்டங்கள் என்பவற்றுக்குப் பின்னாலேயே இழுபட்டுப் போயிருக்கின்றன என்பது படைப்பாளிகளின் குற்றச்சாட்டாயிருந்தது.


இங்கும் சாகித்தியப் பரிசு வழங்கலில் இதே அளவுகோலைத் தவிர வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சு இங்கும் இலக்கியச் செம்மல், கலைச்செம்மல், கலைமணி, தமிழ்மணி என்று பட்டங்களை வழங்கி ஜமாய்த்திருக்கிறது.

வீரகேசரி ஆசிரியர் சிவனேசச் செல்வன் 'இலக்கியச் செம்மல்' ஆகியிருக்கிறார். ரூபவாஹினிக் கூட்டுத்தாபன விஸ்வநாதன் 'தமிழ் மணி' ஆகியிருக்கிறார். சிவனேசச் செல்வன் அவர்களுக்கு பத்திரிகையாளர் என்பதற்காகப் பட்டம் வழங்கப்பட்டதா அல்லது படைப்பிலக்கியத்திற்காகப் பட்டம் வழங்கப்பட்டதா என்பது தெரிய வரவில்லை.

பட்டியலைப் பார்க்கும் போது படைப்பிலக்கியத்திற்கு வழங்கப்பட்டதாகவே தோன்றுகிறது. சிவனேசச் செல்வன் அவர்களின் 'படைப்பு' என்ன என்று அமைச்சு மட்டும்தான் அறியும் போலும். (படைப்பிலக்கியத்திற்காக வீரகேசரியில் யாருக்காவது பரிசு கொடுப்பதானால், அதன் விளம்பர முகாமையாளருக்குக் கொடுத்திருக்கலாம். படைப்பாற்றல் மிக்கவை அவரது விளம்பரங்கள்) இதே போலத் தான் வீ.ஏ. திருஞானசுந்தரம், அப்துல் ஹமீத், அண்ணாமலை போன்றோர்க்கும் பட்டம் வழங்கப்பட்டதற்கான அடிப்படை என்ன என்பதும் தெரிய வரவில்லை. (இவர்கள் வெறும் உதாரணங்கள்தான்) இந்தப் பட்டியல்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டன என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. பட்டியலில் போடப்பட்டிருக்கும் பெயர்களைப் பார்க்கும் போது முடிந்தளவுக்கு எல்லோருக்கும் ஏதாவதொரு பட்டம் கொடுக்கும் நோக்கம் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அல்லது முருகையனும் சிவனேசச் செல்வனும்; வ.அ.இராசரத்தினமும் திருஞானசுந்தரமும்; சண்முகம் சிவலிங்கமும் அப்துல் ஹமீதும் ஒன்றாகப் பட்டியல்களில் புகுந்திருக்க முடியுமா? தமிழில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பட்டத்தை ஏன் வழங்கவில்லை என்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை பிரதமர் மறுத்து விட்டாரோ என்னவோ?

எப்படியோ இந்த சாகித்தியப் பரிசு வழங்கலைப் பார்க்கும் போது சுந்தரராமசாமி தமிழ் சாகித்திய அக்கடமி குறித்து எழுப்புகிற கேள்வி இங்கும் பொருத்தமானது போல் தொன்றுகிறது. 'மக்களின் வரிப்பணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சாகித்திய அக்கடமி என்ற நிறுவனம் கலாசார மதிப்பீடுகளை வளர்ப்பதற்கான ஒரு ஸ்தாபனமா அல்லது இழிவான அரசியல் கால்களை விரித்து தன் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அரசு இயந்திரமா என்ற கேள்வியை உரத்த குரலில் எழுத்தாளர்கள் எழுப்ப வேண்டிய சந்தர்ப்பம் இது' என்கிறார். கேள்வி சரிதானே?



நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

# மூன்று வருட முற்றுகை: குண்டுகளை விதைக்கிற விமானங்கள்

வட-கிழக்குப் பகுதிகளின் மீது இலங்கை அரசு ஆரம்பித்த யுத்தம் துயர்நிறைந்த மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்து நான்காவது வருடத்துள் நகர்கிறது. கருத்தியலால் யுத்தத்தால் அப்பகுதிவாழ் மக்களின் இனத்துவ அடையாளத்தை சிதைக்க முனைந்து தோல்வி கண்ட அரசு இவற்றுடன் கூடவே ஈவிரக்கமற்ற பொருளாதாரத் தடையையும் விதித்துள்ளது. புலிகளுக்கு எதிராகவே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது எனவும் அது அவர்களுக்கு எதிராகவே தொடர்கிறது எனவும் மார் தட்டிக் கொள்ளும் இலங்கை அரசாங்கத்திற்கு வடக்கு கிழக்குப் பகுதிவாழ் மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் இன்னல்கள் எங்கே புரியப் போகிறது?

அரசின் பூரண பொருளாதாரத் தடைக்கு உட்பட்டுத் தவிக்கும் யாழ்குடாநாட்டுப் பகுதியில் இன்று ஏறத்தாழ எட்டரை லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் முப்பத்தி ஓராயிரம் குடும்பங்கள் ஏறத்தாழ மூன்று லட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு நகர்ந்துள்ளனர். மொத்த குடாநாட்டின் சனத்தொகையில் 1/3 ஒரு பகுதியினராக விளங்குபவர்களில் அனேகர் 233 முகாம்களிலும் எஞ்சியோர் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் வசிக்கின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்களின் வாசல் கதவுகளை பார்த்து ஏங்கிய வண்ணமே இவர்களில் பலர் வாழ்க்கை நடாத்துகின்றனர். அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணம் என்கிற பிச்சையிலேயே ஜீவனம் நடத்துகிறார்கள். தமக்குத் தேவையான வேறு பொருட்களை வாங்குவதற்க்குக் கூட நிவாரண அட்டைகளை அடமானம் வைக்கும் பரிதாபநிலையே அங்கு நிலவுகின்றது.

## கடற்றொழிலும் இல்லை

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள 12,000பேர் தம் தொழில்களை இழந்துள்ளனர். காரணம் கடற்கரை ஓரங்களையும் அதனை அண்டிய பகுதிகளையும் இராணுவம் தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதே. இவற்றையும் மீறி ஆங்காங்கே வயிற்றுப் பசிக்காக மீன் பிடிப்போரை வட கிழக்குக் கரையோர கடல் பாதுகாப்புச் சட்டம் முகாம்களுள் தள்ளுகின்றது. இவர்கள் புலிகள் என்ற பெயரில் வதைக்கப்படுகின்றனர். உடன் பிடித்த மீனை மலிவான விலையில் உவப்பாய் உண்ட மக்கள் ஒரு துண்டு மீனுக்காய் கடலைப் பார்த்து ஏங்குகின்றனர். பசிக்கொடுமை தாங்காது உயிரை வெறுத்துக் கடலிலிறங்கும் கணவனை அதிகாலைப் பொழுதில் பிடித்த மீனுடனும் மலர்ந்த முகத்துடனும் காணும் மனைவி அவனின்றி தானாக மிதந்துவரும் வெறும் படகைக் கண்டு துடிப்பதும் புதிதல்ல.



## விமானங்கள் குண்டுகளை விதைக்கின்றன

செம்பாட்டு மண் தோய்ந்த யாழ்ப்பாண பகுதிகளில் குண்டுகளை விதைத்து வருகின்றன விமானப்படையின் இத்தாலிய சியாமசெட்டியும், அவ்ரோவும். குரும்பசிட்டி, குப்பிளான், வசாவிளான், வறுத்தளைவிளான், கட்டுவன், பலாலி, இடைக்காடு, இளவாலைப் பகுதிகள் முழுமையான இராணுவக்கட்டுப்பாட்டினுள்ளே இருப்பதனால் 1/3 பகுதி செம்மண் பிரதேசங்கள் பயிரிடப்படாமல் கைவிடப்பட்டுள்ளன. மொத்த விவசாய நிலப்பரப்பில் 40-45% மானவை பயிர் செய்கைக்கு உட்படாமல் விடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நிலப்பகுதிகளிலோ முறையான பயிர்செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளது. மின்சாரம் இல்லை; எரிபொருட்கள் இல்லை. அரசாங்கம் அனுப்புகின்ற மண்ணெண்ணையோ . விளக்கு எரிக்கவும் போதாது.பின்பு எங்கே பயிர் செய்வது? கிருமி நாசினிகள், பசளை வகைகளுக்கும் தடை. அனுப்புகின்ற விவசாய மருந்துகளையாவது அரசாங்கம் தரமாக அனுப்புவதற்க்குப்பதில் மூன்றாம் தர மருந்துகளையே அனுப்புகின்றது. யூரியாவுக்குப் பதிலாக பயன்படுத்தப்படும் அமோனியம் சல்பேற்றினால் மிகக் குறுகிய காலத்திலேயே நிலம் உவர்த்தன்மை உடையதாக மாறி விடுகின்றது. குளங்கள் கைவிடப்பட்டு பழுதடைந்து போவதால் சிறு போகம் பாதிப்படைகிறது. கால போகம் பொய்க்கிறது. அதனால் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தானியப் பயிர் செய்கைக்கும் உப உணவுப் பயிர்செய்கைக்கும் புகழ்பெற்ற வடக்குப் பகுதியில் இப்போ பணப்பயிரே பிரதான பயிராக விளங்குகின்றது. காரணம் நாற்பது ரூபாய்க்கு புகையிலை விற்று முப்பது ரூபாய்க்கு அரிசி வாங்குவது மக்களுக்கு இயலுமாக உள்ளது.

## மக்கள் மீதான வரிச்சுமை

பேரளவுக் கைத்தொழில்கள், சிற்றளவுக் கைத்தொழில்கள் யாவும் முற்றாக கைவிடப்பட்டு ஆங்காங்கே குடிசைக் கைத்தொழில்களே மேற்கொள்ளப்படுகின்றன. இதில் இருந்து பெறப்படும் உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு போக்குவரத்து வசதியில்லை.

கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி வளர்ந்த வர்த்தக முறைமை வீதிக்கு வீதி பெட்டிக்கடையில் வந்து முடிந்துள்ளது. கொழும்பில் இருந்து வடக்கே கொண்டு வரப்படும் பொருட்கள் முதலில் தாண்டிக் குளத்தில் இறக்கி ஏற்றப்பட்டு, பின்பு ஆலங்கேணியில் இறக்கி படகில் ஏற்றப்படுகிறது. அல்லிப்பளையில் இறக்கப்படும் இப்பொருட்கள் மீண்டும் லொறிகளில் ஏற்றி யாழ்ப்பாணப்பகுதியை அடைகின்றன. அங்கு மொத்த விற்பனையாளர்களூடாக சில்லறை விற்பனையாளர்களை அடைந்தவுடன் அவர்களிடம் நுகர்வோர் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு தாண்டிக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரை பொருட்கள் இறங்கி ஏறும் ஒவ்வொரு தோளுக்குமான பணம் அப்பாவி மக்களின் மீதே சுமத்தப்படுகின்றது.



வாகனங்களால் நிரம்பி வழிந்த யாழ் நகரதெருக்கள் இன்று துவிச்சக்கர வண்டிகளால் நிரம்பியுள்ளன. மண்ணெண்ணை ரியூப்பை வாயில் வைத்தபடி மோட்டார் வாகனங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

ஐந்து ரூபாய் காசுடன் பஸ்சில் ஏறினால் கொழும்பையே சுற்றி வந்து விடலாம். ஆனால் வடக்கிலோ ஐந்து கிலோமீற்றர் செல்வதானால் ஏழு ரூபா முடிந்து விடும். யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறை செல்வதானால் குறைந்தது 25-30ரூபாய் தேவை.

மொத்தத்தில் கிளாலிப் படகுச் சேவையே இன்று யாழ்ப்பாணப் பொருட்களின் விலைகளை நிர்ணயம் செய்கின்றன. அதனாற்தான் யாழ்ப்பாணத்தின் பொருளியல் மாணவனிடம் ஒரு பொருளின் விலையை நிர்ணயிக்கும் காரணிகள் எவை எனக் கேட்ட போது முதலாவதாக கிளாலிப் படகுச் சேவை என்றான்.

## யுத்தமும் உளவடு நோயும்

குழந்தைகளில் இருந்து முதியோர்வரை பெரும்பாலானவர்களுக்கு **யுத்தத்திற்கு பிந்திய உளவடு நோய்** ஏற்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். நோய்க்காக மருந்து எடுக்கச் செல்லும் நோயாளிகள் பலருக்கு மனோவியல் தொடர்பான மருந்துகளையே தாம் வழங்குவதாகவும் அதன்பின் அவர்கள் உளவலு தேறிவருவதாகவும் உள்ளூர் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

## தாய்ப்பால் இல் லாத தாய்

போதிய உணவின்மை போசாக்கின்மை காரணமாகவும் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கர்ப்பிணித் தாய்மார் மரணவீதமும் சிசு மரண வீதமும் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு நோய்வாய்ப்பட்ட தன் குழந்தை ஒன்றை கொண்டு சென்ற தாய் ஒருத்திக்கு வைத்தியர் நன்றாக தாய்ப்பால் கொடுத்தால்தான் குழந்தை நலமாக இருக்கும் எனக் கூறினார். ஆனால் அந்தத் தாய் நான்கு நாளாக உண்ணவில்லை என்பது பின்புதான் வைத்தியருக்குத் தெரியும்.

## பாடசாலைகளில் இராணுவம்

வடக்கின் கல்வி நிலையும் யுத்தத்தினால் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. கரையோரப் பகுதிகளையும் அதனை அண்டிய பகுதிகளையும் உள்ளடக்கிய பாடசாலைகளும் முற்றாக செயலிழந்துள்ளன. குறிப்பாக காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனா யூனியன் கல்லூரிகள், இளவாலை சென்ஹென்றீஸ், கொன்வென்ற்,



வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்,குப்பிளான் விக்கினேஸ்வரா,குரும்பசிட்டி பரமானந்த வித்தியாலயம் முதலான பல கல்லூரிகள் இடிக்கப்பட்டும் கைவிடப்பட்டும் உள்ளன. இப்பாடசாலைகளின் மாணவர்களின் கல்வி இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாலை நேரங்களில் போதிக்கப்படுகிறது.

அச்சுத்தாள்கள், எழுதும் தாள்கள் இல்லை. இதனால் கழிவுத் தாள்களிலேயே எழுத்து வேலைகளும், புத்தக வெளியீடுகளும் நடைபெறுகின்றன. மின்மினிப் பூச்சிபோல் எரியும் விளக்குகளில் கற்கும் மாணவர்களின் கண்களும் கெட்டுப் போகும் நிலை இருப்பதாக கூறப்படுகின்றது.

## மீண்டும் குண்டு வீச்சு

மண்கிண்டிமலைத் தாக்குதலுக்குப் பின் குண்டுவீச்சுகளும் இப்போது அதிகரித்துள்ளன. சுப்பசொனிக், புக்காரா, விமானங்கள் மக்களை கிலி கொள்ளச் செய்வதோடு பொதுமக்களின் இலக்குகள் மீது குண்டுகளை பொழிந்து தள்ளுகின்றன. மிகப்பயங்கரமான வேகத்துடனும் சத்தத்துடனும் வரும் சுப்பசொனிக்குகள் புலிகளின் இலக்குகளை தாக்குவதாகக் கூறி பொது மக்களையே பலிகொள்கின்றன. வருவதும் தெரியாது குண்டு போடுவதும் தெரியாது. ஒரு குண்டு போட்ட பின் இரண்டாவது குண்டுக்கே தப்பமுடியும். ஆறில் இருந்து ஆறரை அடி நீளமும் ஒன்றரை அடி விட்டமும் கொண்ட இக்குண்டு ஏறத்தாழ பதினைந்து பதினாறடி விட்டமும் பத்தடி ஆழமும் கொண்ட குழிகளை ஏற்படுத்துகின்றது. புக்காரா விமானங்களோ திடீரெனப் பதிந்து சரிந்து திரும்பி குண்டுகளைப் போடுகின்றன. அண்மையில் கூட கல்வியங்காட்டில் பாடசாலை மாணவர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

**கரன்**

இந்தக் கொடூரயுத்தமும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் வடக்கின் சூழல் சமநிலை இன்மையினைத் தோற்றுவித்துள்ளதனை எவரும் மறந்து விட முடியாது. எரிப்பதற்கு விறகின்றி மரங்கள் யாவும் தறிக்கப்படுகின்றன.கிடுகு வேலி கட்டி வளர்ந்து வந்த யாழ்ப்பாணச் சமூகம் வேலிகள் அறுந்து பரந்த வெளிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். மண்ணெண்ணெய் வாகனங்கள் எழுப்புகின்ற புகைகளினால் சுவாசிப்பதற்கு நல்ல காற்றும் இல்லாத சூழலாக மாறிவிட்டது வடக்கு.



சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச. பாலகிருஷ்ணன்.